T-UN-411

இறைவன் துணை.



தமிழ்நாட்டு
சமயங்களின் தத்துவங்கள்

1. சமயக்கிளர்ச்சிகள்.
2. சமயப் பிரார்த்தனைகள்.
3. சைவ சமயம்.
4. வைணவ சமயம்.
5. கிறிஸ்து சமயம்.
6. இஸ்லாம்.

முதியோர் கிராமக் கல்வி—3.

கௌமார குருகுலம் மன்னார்குடி.

பாரதி பிரஸ், மன்னார்குடி.

இறைவன் துணை.

கௌமார குருகுலம், மன்னார்குடி.

படிப்பவர்கள் கவனிக்க வேண்டியவை.

1 **படிப்பது எப்படி.** காவல், கதைகள், மன உற்சாகத்திற்கும் காலட்போக்குக்கும் படிப்பது. கைத்தொழிலைப் பற்றிய நூல்கள், தேசசரித்திரம், பெரியோர் வாழ்க்கை சரித்திரம், முதலியன அறிவுவளர்ச்சிக்காகப் படிப்பது. இவைகளை ஒரு தரத்திற்கு இரண்டு தரம் கவனத்துடன் படிக்கவேண்டும். தேவாரம், திருவாய்மொழி, குறள், கீதை முதலிய நூல்கள் பக்தி, ஞானம், ஒழுக்கம் உண்டாவதற்குப் படிப்பது. அவைகளை பல முறை ஆழ்ந்து படிப்பதுடன் பாராயணமும் செய்யவேண்டியது.

2 **படித்து சீக்கிரம் திருப்பிக்கொடுக்கவும்.** புத்தகங்கள் படிப்பதற்காகவே உள்ளன என அறியவேண்டியது அவசியம். ஆதலால் படிக்காமல் நாம் வைத்திருந்தால் மற்றவர்கள் படிப்பதைத் தடைசெய்யும் பழிக்கு உள்ளாகிறோம்.

3 **படித்த புத்தகங்களைப்பற்றி நண்பர்களுக்குச் சொல்லவும்** இன்ன இன்ன புத்தகம் இருக்கிறது எனவும் அவைகளில் விசேஷங்கள் இன்னவை எனவும் மற்றவர்களுக்கும் தெரிவித்தால் அவர்களும் நம்மைப்போல் படித்து ஆனந்திப்பார்கள்.

4 **புத்தகங்களை நன்றாய்க் காப்பாற்றவும்.** படிக்கும்போது எண்ணை, ஈரம், அழுக்கு இல்லாதகையால் எடுத்துப் படிக்கவும்; சுத்தமான இடத்தில் வைக்கவும்; ஏடுகளை மடிக்காமல், கிழிக்காமல், எழுதாமல் காப்பாற்றவும். அடையாளம் வைக்கவேண்டுமானால் ஒரு காகிதம், நூல், ஓலையால் செய்க. வாங்கும்போது பார்த்து கெடுதல் இருந்தால் தெரிவித்து, வாங்கினவர்களிடம் திருப்பிக்கொடுக்கவேண்டியது முறை. கொடுக்கும் போது காண்பித்துக் கொடுக்கவும். புஸ்தகம் படித்தானவுடன் யாரிடம் வாங்கினீர்களோ அவர்களிடமே

திருப்பிக் கொடுத்துவிட வேண்டும். நீங்களே [illegible]றொருவருக்குக் கொடுக்கக்கூடாது. அன்றியும் பு[illegible]கத்தை எந்தவூரில் கொடுக்கப்பட்டதோ அந்த ஊ[illegible] எல்லையைவிட்டு வெளியூருக்குக் கொண்டு போக[illegible] கூடாது.

5 படிப்பவர்கள் ஜாப்தாவில் பதிவு செய்யவும். ஒவ்வொரு புத்தகத்துடனும் ஒரு அச்சிட்ட ஜாப்தா கொடுக்கப்படுகிறது. அதில் படிப்பவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் ஊர் பெயர் வாங்கி கொடுத்த தேதியை எழுதவும்.

6 இனிவேண்டிய புத்தகத்தைத் தெரிவிக்கவும். படித்த புத்தகங்கள் போக இனி படிக்க ஆசைப்பட்ட புத்தகங்களைத் தெரிவித்தால் அனுப்புகிறோம். கையில இல்லாவிட்டால் கூடிய ஏற்பாடு செய்கிறோம்.

7 படிக்கும் முறை. எதிலும் உன் கண்களே உனக்கு முக்கியமானவை. உன் சுகத்திற்கும் துக்கத்திற்கும் அவைகளே காரணம். அவைகளை ஒவ்வொரு நாளும் காலையிலும், மாலையிலும் நல்ல ஜலத்தால் நன்றாய் சுத்தம் செய்யவேண்டும். மங்கலான வெளிச்சத்தில் ஒரு போதும் வாசிக்காதே. வாசிக்கும் போது வெளிச்சம் தெளிவாயும் பிரகாசமாயும் இருக்கவேண்டும். வெளிச்சம் உன் பின்புறமிருந்தாவது இடதுபுறமிருந்தாவது புஸ்தகத்தில் விழட்டும். வாசிக்கும் போது சூரியகிரணங்கள் நேரில் புஸ்தகத்தில் விழக்கூடாது. உன் கண்பார்வையும் நேரில் ஷெ வெளிச்சத்தில் விழக்கூடாது. வாசிக்கும் போது தலையை நிமிர்ந்து பார்த்து புஸ்தகத்தை உன் முகத்திலிருந்து 14 அங்குல தூரத்தில் பிடித்துப் படி. அப்படி படிக்கும் போது இடையிடையே புஸ்தகத்தைப் பார்ப்பதிலிருந்து கண்களுக்கு ஓய்வு கொடு.

கௌமாரகுருகுலம்
8—3—1934

மா. இராமலிங்கம் பிள்ளை,
காரியதரிசி.

T-UN-411

இறைவன் துணை.



தமிழ்நாட்டு
சமயங்களின் தத்துவங்கள்

1. சமயக்கிளர்ச்சிகள்.
2. சமயப் பிரார்த்தனைகள்.
3. சைவ சமயம்.
4. வைணவ சமயம்.
5. கிறிஸ்து சமயம்.
6. இஸ்லாம்.

முதியோர் கிராமக் கல்வி—3.

கௌமார குருகுலம் மன்னார்குடி.

பாரதி பிரஸ், மன்னார்குடி.

இறைவன் துணை.

கௌமார குருகுலக்
கல்விப் பிரசுரம் 1.

இக்காலச் சமயக் கிளர்ச்சிகள்.

ஆசிரியர்:—இராவ்பகதூர் கே. வி. சேஷய்யங்கார், எம்.எ. பி.எல்.
ஹைகோர்ட் வக்கீல், பத்திராசிரியர் பாரத தருமம், சென்னை.

பரம்பொருள் வாழ்த்து.

ஆத்தி சூடி இளம்பிறை அணிந்து
மோனத் திருக்கு முழுவெண் மேனியான்,
கருநிறங் கொண்டுபாற் கடல்மிசைக் கிடப்போன்,
மகமது நபிக்கு மறைஅருள் புரிந்தோன்,
ஏசுவின் தந்தை எனப்பல மதத்தினர்
உருவகத் தாலே உணர்ந்துண ராது
பலவகை யாகப் பரவிடும் பரம்பொருள்
ஒன்றே; அதன்இயல் ஒளியுறும் அறிவாம்;
அதன்அருள் வாழ்த்தி அமரவாழ்வு எய்துவோம்.

—பாரதியார்.

இந்தியாதேசமன்றி உலக மெங்குமே ஒருபுத்துயிர் எழுங் கிளர்ச்சியை இன்று காண்கிறோம். கல்வி எங்கும் பரவு வதாலும், பூதபௌதிக அறிவு வளர்ச்சியினாலும், இதுவரை மற்றவர்கள் பெரியார்களின் வார்த்தைகளை நம்பி அவைகளின் படி நடந்துவந்தவர்கள்கூட மனிதவாழ்க்கையையும் ஜன சமூகத்தையும் பற்றிய பல விஷயங்களையும் அஞ்சாமல் புதிய முறைகளில் ஆலோசித்து முடிவு செய்கிறார்கள்.

சமயமதத்துறையில் உயிர் என்ன மரணம் என்ன சுகம் என்ன என முற்காலங்களிற்போல அழுத்தமாகவும் திருத்தமாகவும் கேட்கிறார்கள். இதுவரை கூறப்பட்டிருப்பவைகளை அறியாதபடி இவ்வாறு கேட்கவில்லை; இதுவரை சொல்லியுள்ளவை மனதிற்குத் திருப்தியை தராததால், தாங்களே சுயமாய் விசாரணை செய்கிறார்கள்; விசாரணையில் தெளிந்த அறிவை வாழ்விலும் அனுபவத்திலும் நடத்துகிறார்கள்.

இப்புத்துயிரின் பலம், எல்லா சமயங்களையும் தாக்கி வருகிறது. கிறிஸ்தவமதத்தில், பல பிரிவுகள் இருப்பினும், முக்கியமாக இரண்டு பிரிவுகள் உண்டு. ஒருவர் பிபிலியசத்திய வேதம் கடவுள்வாக்கு அதன் வாக்கியங்களெல்லாம் சத்தியம் எனவும் மற்றவர் நவீனர் பிபிலியவேதத்தில் கூறப்பட்ட பழையமொழிகளை விசார்த்து தற்கால பூதபௌதிக சாஸ்திர அறிவுடன் அவைகளை ஒத்துப்பார்ப்பது தவறாகாது என்பர். இவ்விருதாரத்தாருக்கும் குழப்பம் வளர்ந்துவருகின்றன. இது இஸ்லாம் மதத்திலும் உண்டு; ஆனால் அது அவ்வளவு தீவிரமில்லாமல் மிதமாக இருக்கிறது. ஹிந்துமதத்திலோ அவ்விதக் குழப்பம் அதிதீவிரமாகவும் வெகு வேகமாகவும் இருந்து கொண்டு மதவிஷயத்திலும் ஜனசமூக விஷயங்களிலும் பிரமாதமான புதிய கிளர்ச்சிகளை எழுப்பிக்கொண்டு இருக்கிறது.

இப்புத்தியினையும் அதன் அந்தரங்கத்தையும் வலிமையையும் நாம் ஆராய்ந்து அறிவது அவசியம். நம்மைச்சுற்றி எல்லாப்பக்கங்களிலும் நிகழ்ந்துவரும் பல மாறுதல்களினால், நாம் அவைகளை ஆழ்ந்து அறியாமல் இருக்கமுடியாது. பழைய சமய சின்னங்களெல்லாம் அழிந்து மறைந்து வருகின்றன. திடமாகவும் வேறு விதியில்லாமலும் ஜனங்கள் வாழ்க்கையைப் பற்றி இதுவரை பழக்கத்திலிருந்த நோக்கங்களுக்கு மாறாகவே

எண்ணி நடக்கிறார்கள். நமக்கு இஷ்டமோ இஷ்டமில்லையோ, வருத்தமோ வருத்தமில்லையோ, ஜனங்களும் சபைகளும் புதிய பழக்க வழக்கத்தைக் கைக்கொண்டு வருவதைப் பார்த்தால்,* காலக்கிரமத்தில் நமது ஹிந்து ஜன சமூகம் நன்கு மாறிவிடும் என்பதில் ஐயமில்லை. இம்மாறுதல்களின் நோக்கமென்ன? இ... றுதல்கள் நம்மை எங்கே தள்ளிக்கொண்டுபோகின்றன? ஹ...துமதம் கடைசியாக என்னவாகும்? இவ்விதமாய் அஞ்சி ...மெல்லெனவும் பலர் கேள்விகேட்கிறார்கள். இவ்வித ஐயப்பாடு நமது நாட்டு அறிஞர்கள் மனதில் நிறைந்துள்ளதெனக் கூறுவது பிழையாகாது. அப்போதைக்கப்போது ஏற்படும், இதுவரை பலமுறை நிகழ்ந்த பல சீர்திருத்தங்களைப் போன்றதா இப்போது நிகழ்வது? அல்லது சமயத்திலும் மதத்திலும் இதுவரையுள்ள நோக்கங்கள் மாறி வேறாகிவிடும் காலம் வந்துவிட்டதா?

எப்போதும்போல இப்போதும் சிலர் இருக்கின்றார்கள்; அவர்களுக்கு சமயம் மதம என்பது சொந்த ஆஸ்தியாகும்; அதன்மூலம் அவர்கள் ஆன்ம அனுபவத்தையும் தன் மோக்ஷத்தையும் தேடுகிறார்கள். இவர்களுக்கு வேண்டியவை எல்லாம் பழைய பழக்க ஒழுக்கங்களிலே இருக்கிறது. வேறு எவையும் தேவையில்லை. அவர்கள் தங்களை மற்றவர்கள் தங்களிஷ்டப்படி விட்டுவிடவேண்டுமெனவும், மற்றவர்கள் தங்கள் தங்கள் இஷ்டப்படி நடந்து கொள்ளட்டுமெனவும் கூறுவர்.

---

*இதுசமயத்தில் முன்னர் சில நூறு வருஷங்களுக்கு முன்னால் சமயத்தில் ஒரு திருத்தம் வளர்ச்சி மாற்றம் ஏற்பட்டகாலத்தில் ஸ்ரீலஸ்ரீ உமாபதி சிவாசாரியார் என்ற பெரியார் கூறுவது யாவரும் ஆழ்ந்து அறியக்கடவது:—

தொன்மையவாம் எனும்எவையும் நன்றாகா; இன்று
    தோன்றியநூல் எனும்எவையும் தீதாகா; துணிந்த
நன்மையினார் நலம்கொள்மணி பொதியும்அதன் களங்கம்
    நவைஆகாது, எனஉண்மை நயந்திடுவர். நடுவாந்
தன்மையினார் பழமைஅழகு ஆராய்ந்து தரிப்பர்.
    தவறுநலம் பொருளின்கண் சார்பு ஆராய்ந்து அறிதல்
இன்மையினார் பலர்புகழில் ஏத்துவர்; ஏதிலர்உற்று
    இகழ்ந்தனரேல் இகழ்ந்திடுவர் தமக்கெனஒன்று இலரே.

தொன்மை—பழமை. நூல்—சாஸ்திரம், புத்தகம்; துணிந்த—நிச்சயமான. பொதியும்—நிறையும், களங்கம்—குற்றம். நவை—சிரிப்பு ஏத்துவது—உயர்த்துவது. ஏதிலர்—பகைவர்.

இதனால் புதியதொரு காரியத்தை எவ்விதமாக ஆராய்ந்து அறிய வேண்டுமெனப் புலப்படும்.

ஆனுல் வேறு சிலர் இருக்கிருர்கள். அவர்கள் கக்ஷியும் எண்ணிக்கையும் அதிகம். அவர்கள் கடினமான, இடஞ்சலான சில சமயத்தில் பதில் சொல்ல வகையில்லாத கேள்விகளைக் கேட்கிருர்கள். விடாதபடி அடக்கத்துடனும் மரியாதையுடனும் கேட்கிருர்கள். இவர்கள் ஹிந்து ஜனசமூகம் அனை[illegible]தையும் ஒன்ருக எண்ணி மற்றவர்கள் கஷ்ட நஷ்டத்தையும் [illegible]களுடையதாக எண்ணி, அன்பும் ஒளியும் நிறைந்த இவ்வு[illegible] ஏன் மனிதர்கள் துன்புற்று உதவியற்றுத் தவிக்கவேண்டு[illegible] இதுவே இவர்களுடைய துயரம். திக்கற்றவனுக்குத் தெய்வமே துணை என்பதை ஒட்டி, உதவியற்ற திசையில் இவர்கள் சமயத்தில் உதவி தேடுகிருர்கள்.

இக்காலச் சமயக் கிளர்ச்சிகளில் எடுத்துக்காட்டாக விளங்கும் அம்சம் எது எனில் ஜனசமூகசெழிப்புக்காகச் செய்யும் வேண்டுகோள்தான். ஒருஜாதி, ஒருவகுப்பாருக்கு என்று இல்லாதபடி எல்லாஜாதி எல்லாவகுப்பாருக்குமே ஈசுவரவணக்சம், ஆன்மவிளக்கம், உயிர்வளர்ச்சி, சமமாகக் கிடைக்கும்படி அவர்கள் வேண்டுகிருர்கள். இவை ஒருவருக்கே சொந்தமல்ல; ஒருவரே சுவாதீனமாக்கிக்கொள்ளல் ஆகாது; யாவரும் பங்கிட்டுக்கொள்ளவேண்டும். சரிபங்காகவும் பங்கிடவேண்டும். இதுவே ஆரிய சமாஜம் பிரம்மசமாஜம் தியசாபிகல்சொஸைடி முதலிய இக்காலச் சமயக்கிளர்ச்சிகளின் பெரும்பேரிகையும் முக்கிய முரசுமாகும். மனுஷசகோதரத்துவத்தையும், அதன்பயனுன சமத்துவப்பயிற்சிக்கும் சமயவசதிக்கும் அவர்கள் வற்புறுத்துகிருர்கள். இக்கால அநேக சங்கடங்களை ஒழிக்க அவர்கள் மதத்தின் உதவியை எதிர்பார்க்கிருர்கள்; சமூக நோக்கங்கள் நன்னேக்கங்களாகவேண்டுமெனின், அவைகள் உண்மை மதத்திற்கு ஒத்ததாய் சமரசமாய் இருக்குமென நிச்சயிக்கிருர்கள்; சமூகத்தை நன்னெறியில் நிலைக்கவைக்கும் அப்பெரும் தீவிரசக்தி சமய அடிப்படையில்தான் உள்ளதென அவர்கள் எண்ணுகிருர்கள். சமய நோக்க ஒழுக்கங்களை ஜனசமூகக் கட்டுக் கேடுருதபடி தடைசெய்யவும் நிலைத்து நிற்கவும் செய்யக் கூடும்; ஜனசமூக மதிப்புகளைக் காலத்திற்கேற்ற சமய சத்தியங்களை நிர்ணயிக்கக்கூடும். இவ்வண்ணம் இக்காலப் புதுசமயக் கிளர்ச்சிகளும் உழைப்போர்களும் கூட எந்த சில மாறுதலாலும்

சமயத்திற்கு மோசம் வந்துவிட்டதென அஞ்சிஅவரும் சநாதனஸ்தர்களைவிட, அதிகமாகவே சமயமத ஆஸ்திகபுத்தியிலேயே நம்பி முயற்சிசெய்கின்றனர். இருவருக்கும் ஈசுவர நம்பிக்கையே; ஆனால் ஒருவர் உலகில் உள்ளதில் ஒன்றும் மாற்[illegible]ப்படாது என்பர்; மற்றவர் காலதேச வர்த்தமானத்திற்கி[illegible] ஈசுவர சக்தியே நம்மை திருத்தி வளர்க்கிறது என்பர்.

இக்காலச் சமயக்கிளர்ச்சிகளின் இரண்டாவது முக்கிய [illegible]சம் என்ன எனில் மனதில் உள்ள சந்தேகங்களை மறைவின்றிப்பேசித்தெளிதலாகும். இது எவ்வளவு எல்லை கடந்து நிகழ்கிறதென்பது ஒரு பெரும் திகைப்பே. இதுவரையில் கட்டிவைக்கப்பட்டிருந்த நாவெல்லாம் திடீரென அவிழ்க்கப்பட்டது போலும்! இந்திய மனம் இப்போது மற்றவர் மொழிக்கு இடந்தரேன் என்கின்றது. பழைய மதக்கொள்கைகளையும் கோட்பாடுகளையும் என் ஒப்புக்கொள்ளவேண்டுமென உதறிஎறிகிறது. எட்டுச்சுவடி தவிற வேறு ஆதாரமில்லாத பழக்க வழக்கங்களின் பயன் யாதென வினவி அவைகளை ஒருபுறமாக ஒதுக்கிவிடுகிறது. ரோட்டில் போகிறவன் கூட அப்பழக்க வழக்கங்கள் நியாயமா அல்லவா எனத்தான் அறியவேண்டுமென்கிறான்.

இவைகளெல்லாம் வருங்காலத்தில் பெரும்பயன் அளிப்பனவாகும். இவைகளை எண்ணிப்பார்த்தால் இவை சீர்திருத்தமென எண்ண இடமில்லை. ஒரு பெரும் குழப்பமாகுமோ என ஆலோசிக்கவேண்டியுள்ளது. ஹிந்துவர்ணாசிரமப் பிரிவுகளுக்குள் ஒரு மனவெறுப்பு எழுந்து வருகிறது. இச்சுயேச்சையின் ஒரு பகுதி எப்படி பூதபௌதிகப்பரிக்ஷையால் பூதபௌதிக அறிவு யாவருக்கும் புலப்படுகிறமாதிரியே ஆன்ம ஈசுவரகாரியங்களும் சுய அறிவுக்கும் சுய அனுபவத்திற்கும் புலப்படவேண்டுமென்கின்றனர். இவ்விதம் கூறுவது ஆச்சரியமாக இருக்கலாம்; ஆனால் அது பிரத்தியக்ஷம். இறை (அரசர்)களுடன் எட்டுச்சுவடியும் ஒழிந்து அழிந்து வருகின்றனபோலும்; ஏனெனில் இறைகளின்வாக்கும் எட்டுச்சுவடிகளின்வாக்கும் விஷ்ணுவாக்கு வேதவாக்கு என்ற காலம் பறந்துவிட்டது. ஜனங்கள் அவ்வித அதிகாரத்தைத் தாக்குகிறார்கள்; இந்த வீரியமே ஈசனை வழிபட நடுவில் பூசாரி யேன்என வினாவுகிறது. இவ்வீரியமே பழைய ஆகமபூஜை சடங்குகள் எவ்விதம் பிரயோசனம் என்று காட்டச்

சொல்லுகிறது. இவ்வீரியம் தனக்கு ஒரு முத்தி மோக்ஷம் வேண்டுமெனுதபடி ஜனசமூக உயர்வுக்கு உழைக்கிறது. நாமெலாம் ஏகம், ஒரே சமூகத்தின் அம்சங்கள் என்ற எண்ணம் இருக்குமானுல், சுயநலமான தன் ஒருவனது சுகமான தான் தப்பிப் பிழைக்கும் தனது முத்தியை மாத்திரம் கருத இய[illegible]ா?

இதுவரை நான் கூறுவது யாது என அறிய[illegible]டக்கும். அதாவது ஒரு பெரும் அரிய அருட்சக்தி உலகில் எ[illegible] இப்போது பொழிந்துவருகிறது. இதன்மூலம் சர்வஜன சம[illegible] புத்தி ஓங்கிவளர்ந்து, உலகெலாம் ஒன்றெனு உணரும் உணர்ச்சி மேலிட்டுள்ளது; உலகில் உள்ள நூற்றைம்பதுகோடி மக்களும் ஒரே குடும்பம் என்ற அறிவு உதித்துள்ளது. கலைப்பயிற்சியாலும் பொருளாதாரத்தாலும் உலகில் உள்ள எல்லா நாடுகளும் மாந்தர்களும் ஒரே கட்டில் அகப்பட்டுள்ளனர். இதுவரைக் கனவிலும் எண்ணுத எண்ணங்களை எண்ணவும் செய்யவும் தீரம் கொண்டுள்ளனர். இந்தியாவிலே பல கிளர்ச்சிகள் தலை எடுத்துள்ளன; இன்னமும் தலை எடுக்கும்; இவைகளின் இலக்ஷியங்களெல்லாம் எல்லாருடைய வாழ்வும் எழில்பெற வேண்டுமென்பதே. இவைகளின் பயனும் நலனும் யாதெனச் சீர்தூக்கி நிச்சயிப்பது ஒரு கூடாதகாரியமே. இவ்வியக்கங்கள் மனிதசகோதரத்துவத்தை வளர்த்து, சமூக சேவையையும் சுயநலத்தியாகத்தையும் பலப்படுத்தி, யாவருக்கும் தீமையாகவும் சத்துருவாகவும் இருப்பவைகளை ஒழிக்க நமது வல்லமையைச் சேர்த்து, ஒரு மனிதன் ஒரு ஜாதி மற்ெறாரு மனிதன் மற்றொரு ஜாதியின் ஜீவனத்தால் உயிர் வாழாமல் செய்துவருமளவும், அவ்வியக்கம் அக்கிளர்ச்சி ஈசுவரனுக்கு இசைந்ததெனவும், சனுதன தருமதத்திற்கு சம்மதமெனவும் கூறுவது பிழையாகாது.

> பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
> செம்பொருள் காண்பது அறிவு. —குறள்.

> தோல்வியும் வெற்றியும் சொன் மதங்கட் கெல்லாம்
> கால பேதத்தினுல் உண்டு உந்தீபற,
> கருத்தன் செயலது என்று உந்தீபற.

பாரதி பிரஸ், மன்னுர்குடி.

இறைவன் துணை

கௌமார குருகுலக்
கல்விப் பிரசுரம் 1.

சமயமும் ஒழுக்கமும் 1.

சர்வ சமயப் பிரார்த்தனைகள்

ஆசிரியர்:—பல பெரியார்.

ஹிந்து—ஸனாதனம்.

ஓம் ஸஹஸ்ர சிர்ஷாபுருஷ: ஸஹஸ்ராக்ஷ: ஸஹஸ்ரபாத்
ஸ பூமிம் விச்வதோ வ்ருத்வா அத்யதிஷ்டத்தசாங்குலம்
புருஷ ஏவேதம் ஸர்வம் யத்பூதம் யச்ச பவ்யம்
உதாம்ருதத்வஸ்யேசான: யதந்நேநாதிரோஹதி
ஏதாவாநஸ்ய மஹிமா அதோ ஜ்யாயாம்ச்ச புருஷ:
பாதோஸ்ய விச்வா பூதாநி த்ரிபாதஸ்யாம் ருதம் திவி

ஏகோ தேவ: ஸர்வபூதேஷு கூட: ஸர்வவ்யாபி ஸர்வபூதாந்தராத்மா
கர்மாத்யக்ஷ: ஸர்வபூதாதிவாஸ: ஸாக்ஷி சேதா கேவலோ நிர்குணச்ச
ஏகோவசி நிஷ்க்ரியாணும் பஹூனும் ஏகம் பீஜம் பஹுதாய: கரோதி
தமாத்மஸ்தம் யேஅனுபச்யந்தி தீரா: தேஷாம் ஸுகம் சாஸ்வதம் நேதரேஷாம்

ஓம் தத்சம்யோராவ்ருணிமஹே காதும்யக்ஞாய காதும் யக்ஞபதயே
தைவீ ஸ்வஸ்திரஸ்துந: ஸ்வஸ்திர்மானுஷேப்ய:
ஊர்த்வம் ஜிகாது பேஷஜம். சம்நோஅஸ்து த்விபதே
சம் சதுஷ்பதே

ஓம் பத்ரம் கர்ணேபி: ச்ருணுயாமதேவா:
பத்ரம் பச்யேமாக்ஷபிர்ய ஜத்ரா:
ஸ்திரை ரங்கைஸ் துஷ்டுவாம், ஸஸ் தனூபி:
வ்யசேம தேவஹிதம் யதாயு:

ஸ்வஸ்தி நஇந்தரோ வ்ருத்தஸ்ரவா:
ஸ்வஸ்திந: பூஷா விச்வவேதா: ஸ்வஸ்தி நஸ்
தார்க்ஷ்யோ அரிஷ்டநேமி: ஸ்வஸ்தி நோ ப்ரஹஸ்பதிர்
ததாது

ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:

புத்தமதப் பிரார்த்தனை

நமோ தஸ்ஸ பகவதோ அரகதோ சம்மாசம்புத்தஸ்ஸ
நமோ தஸ்ஸ பகவதோ அரகதோ சம்மாசம்புத்தஸ்ஸ
நமோ தஸ்ஸ பகவதோ அரகதோ சம்மாசம்புத்தஸ்ஸ

புத்தம் சரணம் கச்சாமி
தம்மம் சரணம் கச்சாமி
சங்கம் சரணம் கச்சாமி

துதியம்பி புத்தம் சரணம் கச்சாமி
துதியம்பி தம்மம் சரணம் கச்சாமி
துதியம்பி சங்கம் சரணம் கச்சாமி

ததியம்பி புத்தம் சரணம் கச்சாமி
ததியம்பி தம்மம் சரணம் கச்சாமி
ததியம்பி சங்கம் சரணம் கச்சாமி

பாணாதிபதே வீரமணி சிகாபதம் சமாதியாமி
ஆதின்னாதானா வீரமணி சிகாபதம் சமாதியாமி
காமேசு மிச்சாசார வீரமணி சிகாபதம் சமாதியாமி
மூஸாவாத வீரமணி சிகாபதம் சமாதியாமி
ஸுரா மேராய மஜ்ஜா பம்மா தத்தான வீரமணி சிகா
பதம் சமாதியாமி

ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:

கிறிஸ்தவப் பிரார்த்தனை.

எல்லா இருதயங்களையும் எல்லா விருப்பங்களையும் எல்லா இரகசியங்களையும் அறிந்திருக்கிற சர்வ ஞானமுள்ள தேவனே, நாங்கள் தேவரீரிடத்தில் பரிபூரணமாய் அன்புகூரவும் உமது

பரிசுத்த நாமத்தை உத்தமமாய் மகிமைப்படுத்தவும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நிமித்தம் உமது பரிசுத்த ஆவியின் ஏவுதலால் எங்கள் இருதயத்தின் சிந்தனைகளைச் சுத்தம்பண்ணி அருளும்.—ஆமேன்.

இஸ்லாம் பிரார்த்தனை.

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்
அல் ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன்
அர்ரஹ்மா னிர்ரஹீம்
மாலிக்கி யெளமித் தீன்
இய்யாக்க நஅபுது வ இய்யாக்க நஸ்த்த ஈன்
இஹ்தி நஸ்ஸிராத்தல் முஸ்த்தகீம்
ஸிராத்தல்லதீன அன்அம்த அலைஹிம் கைரில் மக்ழூபி அலைஹிம்
வலல் லால்லீன். ஆமீன்.

ஹிந்து—திராவிடம்.

திருவே என்செல்வமே தேனே வானோர்
செழுஞ்சுடரே செழுஞ்சுடர் நற்சோதி மிக்க
உருவே என் உறவே என் ஊனே ஊனின்
உள்ளமே உள்ளத்தின் உள்ளே நின்ற
கருவே என் கற்பகமே கண்ணே கண்ணில்
கருமணியே மணி யாடுபாவாய் காவாய்
அருவாய வல்வினைநோய் அடையா வண்ணம்
ஆவடுதன்துறை உறையும் அமரர் ஏறே.
—தேவாரம்.

பச்சைமா மலைபோல்மேனி பவளவாய்க் கமலச் செங்கண்
அச்சுதா! அமரரேறே! ஆயர்தம் கொழுந்தே! என்னும்
இச்சுவைதவிரயான் போய் இந்திர லோகமாளும்
அச்சுவைபெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே!
—திருமாலை

வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யான் எனதுஎன்று அவர் அவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே
—திருவாசகம்.

பெருகியபேரருளுடையா ரம்பலத்தே நடிக்கும்
பெருந்தகை யென்கணவர் திருப்பேர் புகலென்
கின்ருய்
அருகர்புத்தராதியென்பேன் அயனென்பேன் நாரா
யணனென்பேன் அரனென்பேன் ஆதிசிவனென்பேன்
பருகு சதாசிவமென்பேன் சத்தி சிவமென்பேன்
பரமமென்பேன் பிரம மென்பேன் பரப்பிரமமென்
துருவு சுத்தபிரமமென்பேன் துரிய நிறைவென்பேன்
சுத்தசிவ மென்பனிவை சித்துவிளையாட்டே
—திருஅருட்பா

யாவரும் சொல்லக்கூடிய பிரார்த்தனை.

அணுத்தொறுங் கரந்தே: நிறைந்தில குயிரே!
ஆருயிர் தோறுங் கரந்திலங் கொளியே!
அனைத்தையும் ஒன்று யணைக்கும் உள் அன்பே!
நின்னுடன் தானும் ஒன்றென உணரும்
அத்தன் மையினுல், தானும், மற்றெவரும்
ஒன்றே யென்னு முண்மை உணர்கவே.
ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:

ஹிந்துமதப் பிரார்த்தனையின் பொருள்

விராட் புருஷன் ஆயிரம் தலைகளையுடையவர். ஆயிரம் கண்களை யுடையவர். ஆயிரம் பாதங்களையுடையவர். கோளரூபமான பூமியை உள்ளும்புறமும் வியாபித்தும் பத்து அங்குல பரிமாணபாகத்தை அதிக்கிரமித்தும் அவர் உளர். எதுசென்று போனவோ, எதுவரப்போகிறதோ, எது இப்போதத்தியதோ (அந்த) சகலங்களும் (சகல—பிரபஞ்சங்களும்) விராட்புருஷனே. பின்னும் மோட்சத்திற்கு பிரபுவான (இந்தவிராட் புருஷன்) அன்ன—நிமித்தத்திற்காக ஸ்வகீய அவஸ்தையை அதிக்கிரமித்து காரியஜகத் அவஸ்தையைக் கிரஹிக்கிருர். பூத, பவிஷ்யவர்த்தமான ரூபஜகத்துக்கள் இந்த விராட்புருஷனுடைய மஹிமை. பரமாத்ம—புருஷன் விராட் புருஷனைக்காட்டிலும் அதீதன் சகல பூதங்களும் (முக்காலத்தின் பிரவாக ஜீவரூப சமூகங்களும்) இந்த விராட் புருஷனுடைய நாலிலொரு

பாகம் (சுவல்ப—பாகம்) அவருடைய மிச்சமான மூன்று (அதிக) பாகம் ஸ்வயம் பிரகாசஸ்வரூபத்தில் அழிவற்றதாய் இருக்கிறது.

அவர் ஒரே கடவுள் சர்வ பூதங்களிலும் மறைந்து நிற்பவர்; எங்கும் வியாபகர்; ஸமஸ்த ஜீவராசிகளின் அந்தராத்மா கர்மங்களின் அத்யக்ஷர்; சகல பூதங்களில் வஸிப்பவர்; ஹ்ருதய்ஸாக்ஷி; குணரஹிதர் பக்தியால், வச்யப்படுபவர்; பலவித கிரியை ஈச்வரார்ப்பண நிஷ்கிரியை இவைகளின்வித்து. எந்த திடஸ்தர்கள் அவரை ஆத்மஸ்தனுக அறிகிருர்களோ அவர்களுக்கே நித்யானந்தம்; இதராளுக்கு அது இல்லை.

தேக சுகத்துக்கும் மன அமைதிக்கும் அந்த ஆனந்தத்தை நாங்கள்விரும்புகிறோம்; யக்ஞகாரியவழியையும் யக்ஞபதியின் மார்க்கத்தையும் நாங்கள் கோருகிறோம்; எங்களுக்கு தைவீக சாச்வதமங்களம் உண்டாவதாக. மனித வர்க்கங்களுக்கு மங்களம் பொழிவதாக; சுகம், மேலும் மேலும் பொங்குவதாக; எங்களுக்கும் இருகால்பட்சி ராசிக்கும் மங்களம்; நாற்கால் பிராணிவர்க்கத்திற்கும் மங்களம்.

ஓ தேவதைகளே, நன்மை—ஹிதங்களை எங்கள் காதுகளால் கேட்போமாக; ஓ யக்ஞரக்ஷகர்களே, நன்மை—வஸ்துக்களை எங்கள் கண்களால் பார்ப்போமாக; பலமான அவயவங்களமைந்து களிப்பையுண்டாக்கும்; எங்களது திவ்ய சரீரத்தைக் கொண்டு தேவர்களுக்கு ஹிதமாக ஜீவவாழ்க்கையை நடத்துவோமாக; தொன்றுதொட்டு மஹிமைபொருந்திய இந்திரர் நம்மை அனுக்ரஹிப்பாராக; எல்லாம் அறிந்த பூஷான் நம்மை உயர்த்துவாராக; சத்ருஹந்தாவாகிய தார்க்ஷயர் நம்மை ரக்ஷிப்பாராக; ப்ரஹஸ்பதி நமக்கு க்ஷேமமளிப்பாராக.

ஓம் சாந்தமேற்பட; சாந்தமுண்டாக; சாந்தத்தில் மூழ்க.

புத்தமத பிரார்த்தனையின் பொருள்.

பரிபூரண ஞானியும் பரிசுத்தருமான புத்தபகவானுக்கு நமஸ்காரம்

பரிபூரண ஞானியும் பரிசுத்தருமான புத்தபகவானுக்கு நமஸ்காரம்

பரிபூரண ஞானியும் பரிசுத்தருமான புத்தபகவானுக்கு நமஸ்காரம்

புத்தரிடம் சரண மடைகிறேன்
தருமத்திடம் சரண மடைகிறேன்
சங்கத்திடம் சரண மடைகிறேன்
இரண்டாம்முறை புத்தரிடம் சரண மடைகிறேன்
இரண்டாம்முறை தருமத்திடம் சரண மடைகிறேன்
இரண்டாம்முறை சங்கத்திடம் சரண மடைகிறேன்
மூன்றும்முறை புத்தரிடம் சரண மடைகிறேன்
மூன்றும்முறை தருமத்திடம் சரண மடைகிறேன்
மூன்றும்முறை சங்கத்திடம் சரண மடைகிறேன்
எவ்வுயிரையும் கொல்லுவதில்லை என உறுதிமொழி கூறுகிறேன்
ஒன்றையும் அபகரிக்கும் எண்ணத்துடன் தீண்டுகிறதில்லை என உறுதிமொழி கூறுகிறேன்
காமகரமான தீய செயல் ஒன்றும் செய்யவில்லை என உறுதிமொழி கூறுகிறேன்
பொய் புகலேன் என உறுதிமொழி கூறுகிறேன்
போதைவஸ்து ஒன்றையும் உபயோகிக்கமாட்டேன் என உறுதிமொழி கூறுகிறேன்

ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:

இஸ்லாம் பிரார்த்தனையின் பொருள்.

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய இறைவனது திருநாமத்தால் (இதை ஆரம்பிக்கின்றோம்.)

புகழ் யாவும் இறைவனுக்கே; (அவன்) படைப்புக்கள் யாவையும் (படைத்து) ரக்ஷித்தருள்பவன். அளவிடற்கரிய அருளாளன், ஒப்பில்லாத அன்புடையோன், நியாயத் தீர்ப்பு நாளின் அதிபதி (அவனேயாவன். ஆதலின்,) இறைவனே! யாங்கள் உன்னையே வணங்குகின்றோம்; மேலும் உன்னிடமே உதவி தேடுகின்றோம். நீ எங்களை நேரான வழியில் சீராக நடத்துவாயாக. (அந்த வழியானது) எவர்களுக்கு நீ அருள் புரிந்தாயோ அவர்கள் சென்ற வழியே யாகும். (அன்றி) உன் கோபத்திற்கு உள்ளானவர்களோ நெறி தவறினவர்களோ சென்ற வழியல்ல.

ஆமீன்.

[பாரதி பிரஸ், மன்னார்குடி.]

இறைவன் துணை.

கௌமார குருகுலக் கல்விப் பிரசுரம் 1.

சமயமும் ஒழுக்கமும்.

தினசரிப் பிரார்த்தனை.

பல பெரியார் வாக்கு.

தினசரிப் பிரார்த்தனைக்காக சில செய்யுட்கள் தேவாரம், திருவாசகம், நாலாயிரப் பிரபந்தம், தாயுமானவர்பாடல், திருவருட்பா முதலிய நமது தமிழ் நாட்டுப் பெரியார்களின் வாக்குகளினின்றும் பொருக்கி எடுக்கப்பட்டுள்ளன.

இத்துடன் தினம் பகவத்கீதையினின்றும் சில சுலோகங்கள் தமிழில் எளிய நடையில் உள்ளதும் சேர்க்கப்பட்டிருக்கிறன.

இவைகள் அடியிற்கண்ட 6 தலைப்பில் வகுக்கப்பட்டுள்ளன:—(1) கடவுள் அறிவு, (2) பக்தி, (3) இயற்கை முக்குணம், (4) மனித சம்பத்து, (5) பூஜை, தபசு, தானம், (6) அடைக்கலம்.

பிரார்த்தனை செய்வது, மனம் வாக்கு காயம் மூன்றும் ஒற்றுமையாகி அடங்கி கடவுளிடத்து பதிந்து உருகி நிறைந்து நிற்பதேயாகும்.

> கரங்குவிவார் உண்மகிழும் கோன்கழல்கள் வெல்க!
> சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க!

இரண்டு கைகளையும் மார்பினிடம் குவித்து தோத்திரம் செய்யுங்காலத்து உள்ளம் மகிழ்ச்சி அடைகிறதும், இரண்டு கைகளையும் தலையின்மேல் குவித்து வாய்விட்டு ஓங்கித் துதி செய்யுங்கால் பக்தி வெளிமுகமாக மூர்த்தியிடம் பாய்வதும் அனுபவமாகும்.

> தேன்படிக்கும் அமுதாம் உந்திருப்பாட்டைத் தினந்தோறும்
> நான்படிக்கும் போதுஎன்னை நான்அறியேன் நாஒன்றோ
> ஊன்படிக்கும் உளம்படிக்கும் உயிர்படிக்கும் உயிர்க்குஉயிராம்
> தான்படிக்கும் அனுபவம்காண் தனிக்கருணைப் பெருந்தகையே.

குறிப்பு:—தேன்படிக்கும் தேன்படிந்த, நிறைந்த, படிப்பது. (1) நாக்கினாலும், (2) சதையினாலும், (3) உள்ளத்தினாலும், (4) உயிரி (ஆத்மாவி)னாலும், (5) உயிருக்கு உயிரி(கடவுளி)னாலும், (6) அனுபவத்தினாலும் என்றார்.

இதுவே உண்மைப் பிரார்த்தனையின் முறை.

திருப்பள்ளி எழுச்சி.

அதுபழச் சுவையென அமுதென அறிதற்
    கரிதென எளிதென அமரரு மறியார்
இதுவவன் திருவுரு இவனவ னெனவே
    யெங்களை யாண்டுகொண் டிங்கெழுந் தருளும்
மதுவளர் பொழிற்றிரு வுத்தர கோச
    மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னா
எதுவெமைப் பணிகொளு மாறது கேட்போம்
    எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. (1)

(திருவாசகம்)

கடிமலர்க் கமலங்கள் மலர்ந்தன இவையோ
    கதிரவன் கனைகடல் முளைத்தனன் இவனோ
துடியிடை யார்சுழி குழல்பிழிந் துதறித்
    துகிலுரித் தேறினர் சூழ்புன லரங்கா
தொடையொத்த துளவமும் கூடையும் பொலிந்து
    தோன்றிய தோள்தொண்ட ரடிப்பொடி என்னும்
அடியனை அளியனென் றருளிஉன் னடியார்க்கு
    ஆட்படுத் தாய்பள்ளி யெழுந்தரு ளாயே. (2)

(நாலாயிரப் பிரபந்தம்)

பொழுது விடிந்தது என்னுள்ளம் என்கமலம்
    பூத்தது பொன்னொளி பொங்கியது எங்கும்
தொழுதுநிற் கின்றனன் செய்பணி யெல்லாம்
    சொல்லுதல் வேண்டும்என் வல்லசற் குருவே
முழுதுமா னென்ன ஆகமவேத முறைக ளெலாம்
    மொழிகின்ற முன்ன வனே
எழுதுதல் அரிய சீரருட் பெருஞ்சோதி
    என்தந்தையே பள்ளி எழுந்தருள் வாயே. (3)

(திருஅருட்பா)

வாழ்த்து.

வாழ்க அந்தணர் வானவர் ஆன்இனம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெலாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே. (1)

ஆழிபுடைசூ ழுலகம்யாவும் நலம் மேவ!
அறத்துறை புகுந்துயிர்கள் அன்புவெள்ளம் மூழ்க!
பாழில் அலைவேனுடைய பந்தனைகள் சிந்த
பரிந்தருள் சுரந்தமை நிரந்தரமும் வாழ்க! (2)

(நாலாயிரப்பிரபந்தம்)

முதல் நாள்

கடவுள் அறிவு.

—:o:—

திருப்பள்ளி எழுச்சி.

அங்கிங் கெனாதபடி யெங்கும் ப்ரகாசமா
யானந்த பூர்த்தி யாகி
யருளொடு நிறைந்ததெது தன்னருள் வெளிக்குளே
யகிலாண்ட கோடியெல் லாம்
தங்கும் படிக்கிச்சை வைத்துயிர்க் குயிராய்த்
தழைத்ததெது மனவாக்கி னிற்
றட்டாம னின்றதெது சமயகோ டிகளெலாந்
தந்தெய்வ மென்றெய்வ மென்
றெங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிடவு நின்றதெது
வெங்கணும் பெருவழக் காய்
யாதினும் வல்லவொரு சித்தாகி யின்பமா
யென்றைக்கு முள்ளதெது மேற்
கங்குல்பக லறநின்ற வெல்லையுள தெதுவது
கருத்திற்கி சைந்த ததுவே
கண்டன வெலாமோன வுருவெளிய தாகவுங்
கருதியஞ் சலிசெய்கு வாம். (தாயுமானவர்)

எல்லா வித்தைகளுக்கும் இது அரசு. சூக்ஷ்மதத்துவங்களுள் உயர்ந்தது. இவ்வித்தை தூய்மை வாய்ந்தது. உத்தமமானது, பிரத்தியக்ஷ அனுபவத்தில் அறியத்தக்கது, அற நெறியைக் காட்டுவது, நடவடிக்கையில் கொண்டுவர சுலபமானது, அழியாப்பலனைக் கொடுக்கவல்லது. (1)

எனது கண்ணுக்குக்காணாத சொரூபத்தால் இவ்வுலக முழுதும் நிரம்பி இருக்கின்றது. எல்லாப் பிராணிகளுக்கும் நானே ஆதாரம், எனக்கு அவைகள் ஆதாரமல்ல. (2)

எவ்வாறு எல்லா விடங்களிலும் சஞ்சரிக்கும் காற்று ஆகாயத்தில் என்று மிருக்கிறதோ, அவ்வாறே பிராணிகளனைத்தும் என்னிடம் நிலை பெற்றிருக்கின்றன. இதை அறிவாய். (3)

கற்பத்தின் முடிவில் பிராணிகளெல்லாம் என்னிடம் லயமாகின்றன; அடுத்த கற்பத்தின் ஆரம்பத்தில் மறுபடியும் நான் அவைகளை உண்டாக்குகின்றேன். (4)

எனது மாயையின் பலத்தால் தம்தம் இயற்கையைப் பின் பற்றி நடக்கும் உயிர்களின் சமூகம் முழுமையும் நான் அடிக்கடி சிருஷ்டி செய்கிறேன். (5)

இக்கர்மங்கள் என்னைக் கட்டுப்படுத்த மாட்டா. ஏனெனில் அவைகளிடம் நான் நடுநிலைமை வகித்தும், சமானமாகவும் பற்றின் றியு மிருக்கின்றேன். (6)

இவ்வுலகத்தின் தந்தை நான்; தாயும் நான்; தாங்குபவன் நான்; பாட்டன் நான்; அறியத் தகுந்தவன் நான்; தூய ஓங்கா ரம் நான்; ருக் வேதம், யஜர்வேதம், சாமவேதம் இம்மூன்றும் நானே. (7)

இவ்வுலகின் கதி நான்; இதன் போஷகன் நான்; இறைவன் நான்; சாக்ஷி நான்; இருப்பிடம் நான்; நாடும்பதம் நான்; நன்மை செய்பவன் நான்; ஆக்குவதற்கும் அழிப்பதற்கும் காரணம் நான்; இதன் நிலைநான்; களஞ்சியம் நான்; இதன் அழியாவித்தும் நானே.

சாவில்லாமை நான்; சாவும் நான்; இருப்பனவும் இல்லாத னவும் நானே. (9)

வேறொன்றையும் கருதாது என்னையே சிந்தித்து வழிபடுவோ ராகி, எக்காலமும் என்னிடத்தே வசிக்கும் யோகிகளின் யோக க்ஷேமத்தை நானே ஏற்றுக்கொள்ளுகின்றேன். (10)

(கீதை)

முனியனே நான்முகனே முக்கண்ணப்பா என்பொல்லாக்
கனிவாய்த் தாமரைக்கண் கருமாணிக்கமே என்கள்வா
தனியேனு ருயிரே என்தலை மிசையாய் வந்திட்டு
இனிநான் போகலொட்டேன் ஒன்றும்மாயஞ் செய்யேல் என்னையே.

(நாலாயிரப்பிரபந்தம்)

வாழ்த்து.

இரண்டாம் நாள்.

பக்தி.

திருப்பள்ளி எழுச்சி.

சிந்தனை நின்தனக்கு ஆக்கி நாயினேன் தன்கண்ணிணை
நின் திருப்பாதப்போதுக்காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே ஆக்கி வாக்கு உன்
மணிவார்த்தைக்கு ஆக்கி, ஐம்புலன்கள் ஆர
வந்தெனை ஆட்கொண்டு உள்ளே புகுந்த இச்சை மாலமுதப்
பெருங்கடலே! மலையே! உன்னைத்
தந்தனை செந்தாமரைக்காடு அனையமேனித் தனிச்சுடரே!
இரண்டு மிலித் தனிய னேற்கே.

(திருவாசகம்)

வீண் ஆசைகளை விரும்புவோர், உதவாக் கர்மங்களைப்புரிவோர், பயனில்லா ஞானத்தை நாடுவோர்—, ஆகிய மூடர்கள் மோகத்தில் அழுத்தும் ராக்ஷஸ—அசுர—இயற்கையை அடைகின்றனர். (1)

இதற்கு மாறாக மகாத்மாக்கள் தெய்வீக இயற்கையைச் சார்ந்து என்னைப் பிராணிகளின் ஆதி காரணமென்றும் நாசமற்றவனென்றும் உணர்ந்து சஞ்சலமின்றி ஒரே நிலையில் இருந்துகொண்டு என்னைப் பூஜிக்கின்றனர். (2)

அவர்கள் திடமுள்ள கொள்கையுடையவர்கள். ஓயாமல் விடா முயற்சியுடன் என்னைப் போற்றுகின்றனர். பக்தியுடன் என்னை வணங்குகின்றனர். தினந்தோறும் என்னைத் தியானித்து வழிபடுகின்றனர். (3)

தேவதைகளை வழிபடுவோர் தேவலோகத்தை அடைவார்; முன்னோர்களை வழிபடுவோர் பிதுர்லோகத்தைச் சேருவர்; பூதங்களையும், பிரேதங்களையும் பூஜிப்பவர் அவைகளின் உலகங்களை அடைவார்கள்; என்னை வழிபடுவோர் என்னையே சேருவார்கள். ()

இலை, பூ, கனி நீர்; இவற்றில் எதையேனும் பக்தியை முன்னிட்டுத் தளரா முயற்சியுடன் அளிப்பரேல், பக்தியால் அளிக்கப்பட்ட அப்பொருள்களை நான் ஏற்றுக்கொள்வேன். (5)

ஆதலால் நீ செய்வதையும், உண்பதையும், தானமளிப்பதையும், தவம் புரிவதையும், எல்லாவற்றையும் எனக்கு அர்ப்பணம் செய்யக்கடவாய். (6)

இவ்வாறு செய்வதால் நல்ல அல்லது தீய பலனைப் பயக்கும். கர்மபந்தங்களிலிருந்து விடுபட்டு, பலனைத் துறத்தலால் சமத்துவ புத்தி பெற்று, ஜன்மம் மரணம் இவைகளிலிருந்து விடுதலையடைந்து என்னைச் சேருவாய். (7)

கொடிய தீ வழி செல்லுவோனும் என்னை ஓர் வழி நின்று பக்தி செய்வானாகில் அவன் சாதுவானுமென்று உணரவேண்டும். ஏனெனில் இப்பொழுது அவனது இச்சைகள் நல்வழி நிற்கின்றன.

அவன் சீக்கிரத்தில் தர்மாத்மாவாகிறான். இடைவிடாத சாந்தியைப் பெறுகிறான். எனது பக்தன் ஒருபொழுதும் நாசமடையான் என ஐயமற அறியக்கடவாய். (8)

தீய குலத்தில் பிறந்தோரும், மாதர்களும், வைசியர்களும், கடை வருணத்தார்களும், என்னிடம் சரண்புகுந்து பரம கதியை அடைவார்கள். (9)

என்னிடம் உன் மனதை நிலை நிறுத்து, எனது பக்தனாயிரு; என்னை வணங்கு; இவ்வாறு செய்வாயாகில் என்னைச் சரணமடைந்து உன் ஆத்மாவை என்னுடன் பிணைத்து என்னையே கூடுவாய். (10)

(கீதை)

குலந்தரும் செல்வந்தந்திடும் அடியார்படு துயராயின வெல்லாம்
நிலந்தரஞ்செய்யும் நீள்விசும்பருளும் அருளொடு பெருநில மளிக்கும்
வலந்தரும் மற்றுந்தந்திடும் பெற்றதா யினுமாயின செய்யும்
நலந்தருஞ்சொல்லை நான்கண்டு கொண்டேன் நாராயணாவென்னும் நாமம்,

(பெரிய திருமொழி)

வாழ்த்து,

மூன்றும் நாள்

இயற்கை முக்குணம்.

——:o:——

திருப்பள்ளி எழுச்சி.

வாடினேன்வாடி வருந்தினேன் மனத்தால்
பெருந்துய ரிடும்பையில் பிறந்து
கூடினேன்கூடி இளையவர் தம்மொடு
அவர்தரும் கலவியேகருதி
ஓடினேன்ஓடி உய்வதோர் பொருளால்
உணர்வெனும் பெரும்பதம் தெரிந்து
நாடினேன்நாடி நான்கண்டு கொண்டேன்
நாராயணா வென்னும் நாமம்.

(நாலாயிரப்பிரபந்தம்.)

ஞானங்களில் உத்தமமான எந்த ஞானத்தை அனுபவித்து முனிவர்கள் உடல் நீங்கியதும் பரமபதத்தை அடைகின்றனரோ அதை உனக்கு மறுமுறை கூறுவேன். (1)

இந்த ஞானத்தைச் சார்ந்து, என் தன்மை பெற்றோர் உற்பத்தி காலத்தில் மறுபிறப்பு எடுப்பதில்லை. பிரளய காலத்தில் துன்பத்தை அனுபவிக்கவும் வேண்டியிராது (2)

சத்து. ரஜஸ், தமோகுணங்கள் பிருகிருதியினின்று தோன்றுவன. அவை உடல் தாங்கி நிற்கும். அழிவில்லா ஜீவனை தேகத்துள் இணைத்துக் கட்டுகின்றன. (3)

இவற்றுள் சத்துவகுணம் மாசற்றதானதால் ஒளியுள்ளதும் ஆரோக்கியத்தைக் கொடுப்பதுமாக விருக்கின்றது. ஆதலால் ஜீவனை இன்பத்தாலும் ஞானத்தாலும் பந்தப்படுத்துகின்றது. (4)

ரஜோகுணம் இச்சைவடிவானதால் ஆசைக்கும், பற்றுதலுக்கும் மூலமாகின்றது. ஜீவனை கர்ம பாசத்தால் கட்டுகின்றது. (5)

தமோகுணம் அறிவீனத்தாலுண்டாவது. அதுஉடல் தாங்கும் ஜீவனை மோகத்தில் வீழ்த்தி அவனைக் கவனமற்றவனாகவும், சோம்பேறியாகவும் செய்து நித்திரையின் பாசத்தால் அவனை பந்தப்படுத்துகின்றது. (6)

சத்துவகுணமோ ஆத்மாவை. சாந்தி, சுகம், இவைகளிடம் பற்றுள்ளதாகச் செய்கின்றது. ரஜோகுணம் கர்மத்திலும், தமோ குணம் ஞானத்தை மறைத்து மோகத்திலும், பற்றை உண்டுபண்ணுகின்றன. (7)

புலன்கள் வாயிலாக உடலில் ஒளியும், அறிவும் ஓங்கும் பொழுது சத்துவ குணத்தின் பெருக்கை உணரவேண்டும். (8)

ரஜோகுணம் விருத்தியடையும் சமயத்தில் லோபம், பிரவிருத்தி, கர்மங்களின் துவக்கம், சாந்தமின்மை, இச்சை இவைகள் உதிக்கின்றன. (9)

தமோகுணம் பெருகும் காலத்தில் அறிவில்லாமை, மந்தம் கவனமில்லாமை, மயக்கம் முதலியவை உண்டாகின்றன. (10)

சாத்வீக மனிதன் மேலே போகிறான். ராஜஸ புருஷன் நடுவே நிற்கிறான், கடையோனான தாமசகுண முடையவன் அதோகதியடைகிறான். (11)

தேகத்தின் சேர்க்கையால் உதிக்கும் இம்மூன்று குணங்களையும் கடந்து உடல் படைத்தோன் பிறப்பு, இறப்பு மூப்பு, இவைகளிலிருந்து விடுபட்டு மோக்ஷத்தை அடைகிறான். (12)

(கீதை.)

வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட்
டாழ்கின்றா யாழாமற் காப்பானை யேத்தாதே
சூழ்கின்றாய் கேடுனக்குச் சொல்கின்றேன் பல்காலும்
வீழ்கின்றாய் நீயவலக் கடலாய வெள்ளத்தே.

(திருவாசகம்.)

வாழ்த்து.

நான்காம் நாள்

மனித சம்பத்து

—:0:—

திருப்பள்ளி எழுச்சி.

புன்புலால் யாக்கை புரைபுரை கனியப்
பொன்னெடுங் கோயிலாப் புகுந்தென்
என்பெலா முருக்கி யெளியை யாண்ட
ஈசனே மாசிலா மணியே
துன்பமே பிறப்பே யிறப்பொடு மயக்காந்
தொடக்கெலா மறுத்தநற் சோதீ
இன்பமே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

(திருவாசகம்.)

இவ்வுலகில் தெய்வீகமென்றும், அசுரத்தன்மை யுள்ளதென்றும் இருவித சிருஷ்டி விபரமாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. (1)

பயமில்லாமை, உள்ளத்தூய்மை, ஞானத்திலும் யோகத்திலும் நிறை பெற்றிருத்தல், தானம், இந்திரிய நிக்கிரகம், யக்ஞம், வேதாத்தியயனம், தவம், நேர்மை, அஹிம்சை, சத்தியம், ஆத்திரப்படாமை, தியாகம், சாந்தி, பிறர்பால் குறைகூறு திருத்தல், உயிர்கள் பால் கருணை, சிற்றின்ப ஆசையில்லாமை, மேன்மை, மரியாதை சஞ்சலப்படா திருத்தல், தேசு, பொறுமை, உறுதி, சுத்தம், துரோகம் செய்யா திருத்தல், அபிமானமில்லாமை—இக்குணங்கள் தெய்வீக சம்பத்துடன் பிறந்தோனிடம் காணப்படுகின்றன. (2, 3, 4)

டம்பம், கர்வம், அபிமானம், கோபம், பாருஷ்யம், மூடத்தனம் இவை அசுர சம்பத்துடன் ஜன்ம மெடுப்பவனிடம் தோன்றுகின றன. (5)

அசுரத்தன்மையுள்ளவர் செய்யக்கூடிய கார்யங்களையும், செய்யத் தகாதவைகளையும் அறியார். அவ்வாறே அவர்களுக்கு சுத்தம், ஆசாரம், சத்தியம் ஒன்றுமில்லை. (6)

இந்த உலகம் அசத்தியமானது, ஆதார மற்றது. கடவுள் இல்லாததென்று அவர் கூறுவர். காமமொன்றே மனிதன் உண்டாவ

தற்குக் காரணம் என்றும் சொல்லுவர். சிற்றின்ப அனுபவத்தைத் தவிர்த்து இதற்கு வேறு ஏது, என்ன இருக்கமுடியும் என்று எண்ணுவர். (7)

பிரளய காலம்வரை முடிவடையாத கவலைக் கடலில் மூழ்கி, மிகவும் சிற்றின்பப் பிரியர்களாய், 'வாழ்க்கையின் பயன்போகம்' என்று நிச்சயித்தவராய், நூற்றுக்கணக்கான ஆசைகளின் வலையில கப்பட்டு, காமத்தாலும், குரோதத்தாலும் ஆழ்த்தப்பட்டு விஷய போகத்திற்காக தீயவழிகளில் செல்வம் சேர்க்க அவர்கள் விரும்புகின்றனர். (8)

ஆத்மாவை நாசம்செய்து நரகத்தில் வீழ்த்துவதற்கு காமம், குரோதம், லோபமாகிய இம்மூன்று குணங்களும் மூவித வாயில்களாகின்றன. ஆதலால் இம்மூன்றையும் மனிதன் அறவே ஒழிக்க வேண்டும். (9)

இம்மூன்று நரக வாயில்களுக்கப்பால் தூரத்தில் இருக்கும் புருஷர்கள் தங்கள் ஆத்மாக்களின் நன்மையைத் தேடி, பரம பதத்தை அடைகின்றனர். (10)

(கீதை.)

வேதநூற் பிராயம்நூறு மனிதர்தாம் புகுவரேனும்
பாதியு முறங்கிப்போகும் நின்றதிற் பதினையாண்டு
பேதைபா லகனதாகும் பிணிபசி மூப்புத்துன்பம்
ஆதலால் பிறவிவேண்டேன் அரங்கமா நகருளானே

(திருமாலை.)

வாழ்த்து.

ஐந்தாம் நாள்

பூஜை, தபசு, தானம்,

—:o:—

திருப்பள்ளி எழுச்சி

மறம்திகழும் மனமொழித்து வஞ்சமாற்றி
ஐம்புலன்களடக்கியிடர்ப் பாரத்துன்பம்
துறந்து இருமுப்பொழுதேத்தி யெல்லையில்லாத்
தொன்னெறிக்கண் நிலைநின்ற தொண்டரான
அறம்திகழும் மனத்தவர் தம்கதியைப் பொன்னி
யணியரங்கத் தரவணையில் பள்ளிகொள்ளும்
சிறம்திகழும் மாயோனைக்கண்டு என்கண்கள்
நீர்மல்க வென்றுகொலோ நிற்கும்நாளே.

(பெருமாள் திருமொழி.)

எல்லோருடைய சிரத்தையும் தம்தம் இயற்கையை அனுசரித்தே இருக்கும். ஒவ்வொரு மனிதனிடத்தும் சிறிதள வேனும் சிரத்தை இருந்தே தீரும். ஒருவனுடைய சிரத்தை எவ் வித மிருக்கிறதோ அவன் அவ்விதமேயாகின்றான். (1)

சாத்துவிக ஜனங்கள் தேவர்களை வழிபடுவார்கள். ராஜஸ மனிதர் யக்ஷர்களையும், ராக்ஷஸர்களையும் பூஜிப்பார்கள். தாமஸ புருஷர்களோ பூதங்களையும், பிரேதங்களையும் தொழுவார்கள். (2)

டம்பமும், அகங்காரமும் நிறைந்த மனிதர் காமத்தாலும், ஆசையாலும் தூண்டப்பட்டு சாஸ்திர விதிகளைக் கவனியாது கோரமான தவம்புரிகின்றனர். அம்மூடர் தங்கள் உடலில் இருக் கும் ஐந்து மகா பூதங்களையும், உள்ளத்தில் குடிகொண்டிருக்கும் என்னையும் கிலேசப்படுத்துகின்றனர். இவர்கள் அசுரத்தன்மை வாய்ந்தவர்களென்று உணர்வாய். (3)

தேவர், பிராமணர், குரு, ஞானி இவர்களை வழிபடுதல், தூய்மை, நேர்மை. பிர்ம்மசர்யம், அஹிம்சை இவை சரீரத்தின் தவமென்று உபதேசிக்கப்படுகின்றன. (5)

பிறருக்குத் துன்பம் விளைவிக்காமை, உண்மை, அன்பு இன் மொழி, அறநூல்களை ஆராய்தல்—இவைகளை வாக்கின்தவமென்று கூறுவர். (5)

மன மலர்ச்சி, மகிழ்ச்சி, மௌனம், புலனடக்குதல், மனோபாவங்களின் பரிசுத்தத் தன்மை இவை மனத்தின் தவமென்று சொல்லப்படும். (6)

கொடுப்பது உசிதமென்று எண்ணி, பதிலுபகாரத்தை எதிர்பார்க்காமல், தேசம், காலம், தகுதி முதலியவற்றை ஆராய்ந்து கொடுக்கப்படும் தானம் சாத்விக தானமாகும். (7)

பிரதி உபகாரத்தை விரும்பியோ, பலனை உத்தேசித்தோ, மனவருத்தத்துடன் கொடுக்கப்படும் தானம் ராஜஸ தானமாகும். ()

தேசம், காலம், பாத்திரன் ஆகிய ஒன்றையும் சிந்தியாது அவமரியாதை செய்து அருவருப்புடன் கொடுக்கப்படும் தானம் தாமஸமாகும். (9)

யக்ஞம் தானம், தவம், இதர காரியங்கள், எதுவும் சிரத்தையின்றி இயற்றப்படின் 'அஸத்' என்று கூறப்படும். அது இம்மையிலும் பயன்படாது. மறுமையிலும் உதவாது. (10)

(கீதை.)

வேண்டத்தக்க தறிவோய்நீ வேண்டமுழுதுந் தருவோய்நீ
வேண்டுமயன்மாற் கரியோய்நீ வேண்டிஎன்னைப் பணிகொண்டாய்
வேண்டிநீயா தருள்செய்தா யானுமதுவே வேண்டினல்லால்
வேண்டும்பரிசொன் றுண்டென்னி லதுவுமுன்றன் விருப்பன்றே.

(திருவாசகம்.)

வாழ்த்து.

ஆறும் நாள்.

அடைக்கலம்.

——:o:——

திருப்பள்ளி எழுச்சி.

எனக்கெனச் செயல் வேறிலை; யாவுமிங் கொருநின்
தனக் கெனத்தகும்; உடல்பொருள் ஆவியும் தந்தேன்;
மனத் தகத்துள அழுக்கெலாம் மாற்றி, எம்பிரான்! நீ
நினைத்தது எப்படி அப்படி அருளுதல் நீதம்.

(தாயுமானவர்.)

எல்லாக் கர்மங்களும் தோஷமுள்ளவை, ஆதலால் அவைகளைத் துறப்பதே நலமென்று பல மேதாவிகள் உரைக்கின்றனர். யக்ஞம், தானம், தவம், இம்மூவகைக் கர்மங்களையும் விடாமல் செய்யவேண்டுமென்று வேறு பலர் சொல்லுகின்றனர். (1)

யக்ஞ, தான, தவ கர்மங்களைத் துறக்கலாகாது. அவைகளைச் செய்தே தீரவேண்டும். அறிஞரின யக்ஞம், தானம், தவம் இம்மூன்றும் தூயப்படுத்துவன. (2)

இக்கர்மங்களைப் பற்றின்றி, பலனை விரும்பாது புரிதல்வேண்டுமென்பது எனது முடிவான உத்தம சித்தாந்தம். (3)

கடமையான காரியங்களைத் துறத்தல் நியாயமல்ல. மதிமயக்கமுற்று அவைகளை விட்டுவிடின், அத்தியாகம் தாமஸமென்று கருதப்படவேண்டும். (4)

துக்கத்தைக் கொடுப்பது, உடலுக்குக் கஷ்டத்தை விளைவிப்பது, என்ற பயத்தால் செய்யாமல் விலகுவது ராஜஸ தியாகமாகும் இதனால் உண்மையான தியாகத்தின் பயன்கிட்டாது. (5)

கடமை என்று நினைத்து, அவசியமான கர்மங்களைப் பற்றின்றி, பலனைத் துறந்து, செய்வதே சாத்வீக தியாகமென்று உணரவேண்டும். (6)

பலத்தில் ஆசையின்றி, விருப்பு வெறுப்பு ஒழித்து புருஷன் தன் கடமையென்று செய்யும் கர்மம் சாத்விகமாகும். (7)

போகத்தை விரும்பி, 'நான் செய்கிறேன்' என்ற அபிமானத்துடன் அதிக ஆயாசத்துடன் செய்யும் கார்யம் ராஜஸ கர்மமெனப்படும். (8)

கர்மத்தின் பரிணாமத்தை ஆலோசிக்காமல் அதனாலுண்டாகும் தீங்கு, ஹிம்சை முதலியவற்றை ஆராய்ந்து தனது ஆற்றலையும் கவனியாது மதிமயக்கத்தால் மனிதன் கர்மம் செய்வானாயின் அக்கர்மம் தாமஸமென்று கூறப்படும். (9)

எல்லாவற்றிலும் பரம ரகஸ்யமான மற்றுமோர் வசனத்தையும் கேள். நீ எனக்கு மிகவும் அன்பன். ஆதலால் உனது நன்மையை நாடி உனக்குச் சொல்லுகின்றேன். (10)

மனத்தை என்பால் நாட்டு; என்னிடம் பக்தி செய்; என் பொருட்டு யக்ஞத்தை இயற்று; அப்பொழுது நீ என்னையே சேருவாய். இது எனது வாக்குறுதி எனக் கொள்வாய். நீ எனக்கினியன். (11)

எல்லா தர்மங்களையும் துறந்து, என்னை ஒருவனையே சரணமடை, நான் உனது தீவினைகளனைத்தையும் போக்கி உன்னை விடுவிக்கின்றேன். துயரப்படாதே. (12)

(கீதை.)

உங்கையிற் பிள்ளை யுனக்கே யடைக்கலமென்
றங்கப் பழசொற் புதுக்குமென் அச்சத்தால்
எங்கள் பெருமா னுனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை யுனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே யெமக்கெங்கோ னல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய்.

(திருவாசகம்.)

வாழ்த்து.

ஸ்ரீ பிரஹத்சுந்தரகுசாம்பிகா பிரஸ், திருவிடைமருதூர்.

உ

இறைவன் துணை

கௌமாரகுருகுல கல்விப் பிரசுரம்—1.

சமயமும் ஒழுக்கமும்—3.

சைவ சமயம்

ஆசிரியர் :

திரு. எம். பாலசுப்பிரமணிய முதலியார், பி. எ., பி. எல்.

'சித்தாந்தம்' பத்திராசிரியர், ஹைகோர்ட் அட்வகேட், சென்னை

சமயம் என்றால் என்ன ? :—ஒவ்வொரு உயிரும் தனது வாழ்க்கையின் லக்ஷியமாகக் கொண்டுள்ளது இன்பம் என்ற பொருளையே. ஏனைய பொருள்களும் செயல்களும் இந்த முடிவான லக்ஷியத்துக்கே சாதனங்களாக உள்ளன. இந்த இன்பம் சிற்றின்பம் பேரின்பம் என இருவகைப்படும். சிற்றின்பமாவது உலகத்திலுள்ள பொருள்களினால் உயிரினிடத்து உண்டாகும் பற்றையே துணையாகக் கொண்டு ஏற்படுவது. இவ்வுலகத்துப் பொருள்களும் உயிரின் பற்றும் மாறுகின்ற தன்மையுடையன. ஆகையால் சிற்றின்பம் எப்போதும் மாறும் சுபாவமுடையது. ஆகையால் பெருகவும் சிறுகவும், நிலைக்கவும் நிலை தவிரவும் செய்யுந்தன்மை சிற்றின்பத்துக்கு இயல்பாக உண்டு. ஆனால் பேரின்பமோ கடவுள் என்ற பொருளை உயிர் பற்றிக் கொள்வதால் உண்டாவது. கடவுள் என்றும் மாறாததும் நிலையுள்ளதும் எல்லாவற்றிற்கும் பெரியதுமான இன்பத்தை எப்போதும் அநுபவிப்பவர். ஆகையால் அவரைப் பற்றுவதால் உண்டாகும் பேரின்பமும் அவ்வாறே இருக்கும். சிற்றின்பத்துக்குச் சாதனமாகவுள்ள அறிவைத் தருவன உலக அறிவியல் நூல்கள் (Sciences). பேரின்பத்துக்குச் சாதனமாகவுள்ள அறிவைத் தருவன சமய நூல்கள். எனவே சமயத்தைப் பேரின்ப அறிவியல் என்னலாம்.

சைவ சமயம் :—மக்கள் தன்மை, பழக்க ஒழுக்கங்கள், அறிவு, அநுபவமுதிர்ச்சி முதலியவைகட்குத் தக்கவாறு சமயங்களும் பலவுள்ளன. இவற்றுள் எல்லாவற்றிலும் சிறந்ததும் மற்றெல்லா சமயங்களையும் தன்னுள் ஏணிப்படிகள் போல அடக்கியுள்ளதும் மிகுந்த பரிசுத்தம், அறிவு, அருள் முதலியவற்றை அங்கங்களாகக் கொண்ட பேரின்பத்தைத் தருவதுமாகிய சமயம் சைவ சமயமெனப்படும். இதிலும் பல பிரிவுகளுள்ளன. இவற்றுட் சிறந்தது சைவ சித்தாந்தம் எனப்படும். இதையே இங்கு நான் எடுத்து விவரிப்பேன். சைவம் என்று நான் கூறுமிடத்திலெல்லாம் சைவ சித்தாந்தம் என்றே நீங்கள் எண்ணிக் கொள்ளவேண்டும்.

சைவத்தின் அடிப்படை :—சைவ சித்தாந்தத்தின் அடிப்படையான கொள்கை ஒன்றே. அதை ஒரே வாக்கியத்தில் சொல்லிவிடலாம். ஆதியும் அந்தமும் இல்லாத பொருள்களான கடவுள் (பதி), உயிர் (பசு), உலகம் (பாசம்) என்ற மூன்றினுள் உயிர் தன்னை இயல்பாகக்கட்டிப்பிணைத்துள்ள பாசத்திலிருந்து கடவுளின் திருவருளைத்

துணையாகக் கொண்டு விடுபட்டு கடவுளின் திருவடியில் பேரின்பத்தை யடைதல் என்பது தான் சைவ சித்தாந்தத்தின் அடிப்படையான உண்மை. இவ்வரிய வுண்மையை விளக்குவதற்காகவே ஆயிரக் கணக்கான விவர உண்மைகள் ஏற்பட்டுள்ளன. இனி இவ்விவர உண்மைகள் சிலவற்றைக் காண்போமாக.

முப்பொருளுண்மை:—அண்ட சராசரங்களிலுள்ள எல்லாப் பொருள்களையும் மூன்று பிரிவுகளுள் அடக்கி விடலாம். அப்பிரிவுகள் பதி (கடவுள்), பசு (உயிர்கள்), பாசம் (உலகம், மலங்கள்முதலியன) என்பன. இவ்வாறு பிரிப்பதற்கு முப்பொருளுண்மை என்று பெயர். இம்மூன்றும் ஆதியும் அந்தமுமில்லாமல் என்றும் உள்ளனவென்பது சைவ சித்தாந்தத்தில் முக்கியமான ஒரு உண்மை.

கடவுள்:—கடவுள் சைவத்தில் சகுணக் கடவுளாகவும் நிர்குணக் கடவுளாகவும் விளங்குகிறார். சகுணக் கடவுள் எட்டு குணங்களை யுடையவராய் உலகத்தில் விறகில் தீயைப் போலவும் எள்ளுக்குள் எண்ணெய் போலவும் இருக்கிறார் (Immanent). நிர்குணக் கடவுள் உருவம் தொழில் குணம் முதலியவற்றில் எவையுமின்றி எல்லாவற்றிற்கும் புறம்பாக நிற்கிறார் (Transcendental). உயிர்கள் முதன்முதலாக சகுணக் கடவுளின் இலக்கணத்தை யறிந்து வழிபட்டபிறகே நிர்குணக் கடவுளை யறியவேண்டும்.

கடவுளின் எண் குணங்களும் ஐந்தொழில்களும்:—சகுணக் கடவுளின் எட்டுக் குணங்களாவன :—(1) தன்வயத்தன் ஆதல், (2) தூயவுடம்பினனாதல், (3) இயற்கை யுணர்வினனாதல், (4) முற்றுமுணர்தல், (5) இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், (6) பேரருள் உடைமை, (7) முடிவில் ஆற்றலுடைமை, (8) வரம்பில் இன்பமுடைமை என்பனவாம். இக்குணங்களையுடைய கடவுள்தான் உலகத்துக்கு நாயகனாக இருக்கும் தகுதி யுடையவர்; நாயகனாகவே இருக்கிறார்; உயிர்களுக்கும் தலைவனாக விளங்குகிறார். எல்லாத் தொழில்களையும் நடத்துபவரும் இவரே. இவரது தொழில்கள் ஐந்து வகைப்படும். இவை சிருஷ்டி (Evolution), ஸ்திதி (Existence), சம்ஹாரம் (Transformation), திரோபவம் (involution), அநுக்ரஹம் (Manifestation of grace) என்பன. இத்தொழில்களை நடத்த இவருக்கு இச்சை கிரியை ஞானம் (Will, force, wisdom) என்ற மூன்று வகையான சக்தி துணைசெய்கிறது. உலகத்தில் கடவுள் சக்தியோடு பிரிக்க முடியாத தன்மையாகக் கலந்து தொழில் செய்கிறார். சக்தியோடு கலந்த சிவம் என்ற இக்கடவுளே கோயில்களில் சிவலிங்க உருவமாக வணங்கப்படுகிறார். இவ்வாறு சக்தியோடு கூடிய கடவுள் ஒன்பது தொழிற்படு கடவுளர் மூலமாக உலக காரியங்களை நடத்துகிறார். இவ்வொன்பது கடவுளருள் ஒருவரையே தலைவராகச் சில சமயங்கள் கொள்ளும். என்றாலும் அச்சமயத்தவர்கட்கும் அவரவர் தகுதிக்கேற்ப அருள் செய்பவர் முழுமுதற் கடவுளே யாவார்.

கடவுள் நிமித்த காரணர், சத்காரியவாதம்:—ஒவ்வொரு காரியத்துக்கும் மூன்று வகையான காரணங்கள் உண்டு. அவை முதற்

காரணம், துணைக்காரணம், நிமித்த காரணம் எனப்படும்(Material, instrumental, and personal causes). ஒரு மண் பானையைச் செய்வதற்கு மண் தேவை ; கோல் சக்கரம் முதலிய ஆயுதங்கள் தேவை ; குயவனும் தேவை. ஆயுதங்களை அறிவோடு உபயோகித்தால் குயவன் மண்ணைப் பானை யாக்குவான். இங்கே மண் முதற்காரணம் ; கோல் சக்கரம் துணைக் காரணம் ; குயவன் நிமித்த காரணம். இஃதேபோல் மாயையை முதற்காரணமாகவும் சக்தியைத் துணைக் காரணமாகவும் கொண்டு கடவுள் நிமித்த காரணராக இருந்து உலக காரியங்களை நடத்துகிறார். இந்த முறையில் உலக காரியத்துக்குக் காரணங் கூறுகிறதற்குச் சத்காரிய வாதம் என்று பெயர். சைவ சித்தாந்தத்தின் முக்கியமான கொள்கைகளுள் இதுவும் ஒன்று. வேறு பல சமயங்களில் கடவுள் முதற் காரணராகவும் துணைக் காரணராகவும் கருதப்படுகிறார். ஆனால் சைவத்தில் அவ்வாறு அவரை எண்ணுவதில்லை. அவ்வாறு எண்ணினால் முப்பொருளுண்மைக்கு பங்கம் உண்டாகும்; அறிவியலுக்கும் பொருந்தாது. பௌதிக சாத்திரத்தில் (Indestructibility of matter) உள்ளது போகாது என்ற உண்மை ஒன்றுண்டு. உள்ளது போகாது இல்லது வாராது என்பதே சத்காரிய வாதம். கடவுள் ஒன்றுமில்லாத வெறும்பாழிலிருந்து உலகங்களை உண்டாக்கினார் என்பது சத்காரியவாதத்துக்கும், பௌதிக சாத்திர உண்மைக்கும், சாதாரண நம்பிக்கைக்கும் முரணாக இருக்கும். சைவம் அவ்வாறு கூறவில்லை. சூக்ஷ்மமாக உள்ள பொருளிலிருந்து ஸ்தூலமான உலகத்தை வருவிப்பதுதான் சிருஷ்டி யென்றும் அவ்வாறே ஸ்தூலத்தைப் பிரித்து சூக்ஷ்மத்துள் அடக்குவதுதான் சம்ஹாரம் என்றும் சைவ சமயம் கூறுகின்றது.

சிவத்தின் இயல்பு:—நாம் உலகத்தோடு தொடர்பு வைத்துள்ள வரையில் இந்த உலகத்தோடு தொடர்புடைய சகுணக் கடவுளை வணங்க வேண்டும். நாம் உலகத் தொடர்பை விட்டால் உலகத் தொடர்பில்லாத நிர்குணக் கடவுளை வழிபடலாம். இவ்வாறு சகுணமாகவும் நிர்குணமாகவும் கூறப்படும் கடவுளுக்குத்தான் சைவ சமயம் "சிவம்" என்று பெயர் கொடுத்திருக்கிறது. சகுணமும் நிர்குணமும் ஒன்றற் கொன்று மாறுபட்டதுபோலத் தோன்றுவதால் இவ்விரண்டு தன்மையிலும் நிற்கும் கடவுளை வருணிக்கும்போதும் ஒன்றோடொன்று மாறுபட்ட சொற்கள் அடுக்கடுக்காக வரும். உதாரணமாக கடவுளிலக்கணங் கூறும் சிவஞான சித்தியார் முதற் சூத்திரத்தின் கடைசி செய்யுள்,

"சிவன் உருஅருவும் அல்லன் சித்தினோடு அசித்தும் அல்லன்
பவமுதல் தொழில்கள் ஒன்றும் பண்ணிடு வானும்அல்லன்
தவமுதல் யோகபோகம் தரிப்பவன் அல்லன் தானே
இவை பெறஇயைந்தும் ஒன்றும் இயைந்திடா இயல்பினனே"

என்று சிவபெருமானை வர்ணிக்கிறது. இம்மட்டில் கடவுளின் இலக்ஷணத்தைப்பற்றிய பேச்சை நிறுத்திக்கொண்டு இனி உயிர்களின் லக்ஷணத்தைப்பற்றிச் சிறிது ஆராய்வோம்.

உயிர் அல்லது ஆன்மா :—உயிர் கடவுளைப்போலவே ஆதியும் அந்தமுமில்லாத பொருள். கடவுள் உயிர்களை உண்டாக்குவதில்லை; உடம்புகளையும் மற்றவைகளையுமே உண்டாக்குகிறார். உயிர் பிராண வாயு, அறிவுகள், பொறிபுலன், கரணங்கள் முதலியவற்றிற்கு வேறாக வுள்ள பொருள். மேற்கூறியவைகளெல்லாம் கருவிகள் அல்லது தத்துவங்கள் எனப்படும். உள் நிலைக்கருவிகள் முப்பத்தாறுக்கும் தத்துவங்கள், புற நிலைக்கருவிகள் அறுபதுக்கும் தாத்விகங்கள் என்று பெயர். இரண்டையும் சேர்த்துப் பொதுவாகத் தொண்ணூற்றாறு தத்துவங்கள் என்று சாதாரணமாகச் சொல்வதுண்டு. இந்த தத்துவங்களை யறிந்து அவற்றிற்கு வேறாக உயிர் நிற்கவேண்டும். இந்த விவரங்களெல்லாம் கட்டளை நூல்களில் கிடைக்கும். ஜாக்கிரதை, ஸ்வப்னம், சுஷுப்தி, துரியம், துரியாதீதம் என்று ஐந்து அவஸ்தைகளும் ஆன்மாவுக்கு உண்டு (Five stages of consciousness). இவற்றுள் கீழால வஸ்தை, மத்தியாவஸ்தை, நின்மலா வஸ்தை, கேவலா வஸ்தை, சகலாவஸ்தை, சுத்தாவஸ்தை, காரணாவஸ்தை, காரியாவஸ்தை என்ற பாகுபாடுகளும் உண்டு. இவைகளைக் கட்டளை நூல்கள் விரிவாகக் கூறும். உயிர்கள் விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என மூவகைப்படும். ஆணவம் என்ற ஒரு மலமுடையார் விஞ்ஞான கலர், ஆணவம் கன்மம் என்ற இருமல முடையார் பிரளயாகலர், ஆணவம் கன்மம் மாயை என்ற மும்மலமுடையார் சகலர்.

ஆன்மா சதசத்து :—செம்பில்களிம்பு இருப்பதுபோல் இயல்பாகவே உயிரில் பாசம் இருக்கிறது. உலகத்தைச் சார்ந்துள்ளபோது இப்பாசம் உயிரை நன்றாய்ப் பற்றிக்கொள்ளும். உலகத்தைச் சாராமல் கடவுளைச் சார்ந்துள்ளபோது பாசம் விலகும். இவ்விரு தன்மையாகவும் உயிர் இருப்பதால் இதற்கு சதசத்து என்று பெயர். அதாவது அசத்தாகிய உலகத்தைச் சார்ந்தால் அசத்தாகவும் சத்தாகிய கடவுளைச் சார்ந்தால் சத்தாகவும் ஆன்மா விளங்குவதால் சத்+அசத்து= சதசத்து என்று ஆன்மாவுக்குப் பெயர் ஏற்பட்டது. இம்மட்டில் உயிர்களைப்பற்றிய ஆராய்ச்சியை நிறுத்திக் கொண்டு இனிப்பாசத்தைப்பற்றிச் சிறிது கவனிப்போம்.

பாசம் (மலம், உலகம்) :—பாசம் என்பது உயிர்களைக் கட்டிக் கடவுளையும் பேரின்பத்தையும் அடைய வொட்டாது குறுக்கே நிற்கும் தடைப்பொருள். இதை ஐந்து கூறாக்கி ஆணவம், கன்மம், திரோதாயி, சுத்தமாயை, அசுத்தமாயை என்ற ஐந்து மலங்களென்றும் கடைசி மூன்றையும் மாயை என்ற ஒரு கூற்றில் அடக்கி, மும்மலங்களென்றும் கூறுவது வழக்கம். இம் மும்மலங்களுக்கும் மூல காரணமாகவும் ஒழிப்பதற்கு மிகவும் கஷ்டசாத்தியமாகவும் உள்ளது ஆணவமலம். ஆகையால் இதையே மூலமலம் என்றும் பொதுவாக மலம் என்றும் கூறுவதும் வழக்கம். இனி இம்மலங்களாகிய பாசத்தின் தொழிலைக் கவனிப்போம்.

பாசத்தின் தொழில்:—சுத்தமாயை விஞ்ஞான பிரளயாகலர்க்கு தநுகரண புவன போகங்களாயிருக்கும். தநுவென்றால் உடம்பு, கர

ணம் என்றால் உடம்புக்கேற்ற இந்திரிய முதலிய சாதனங்கள், புவனம் என்றால் உலகம், போகம் என்றால் உடம்பால் செய்யப்படும் தொழில். இவ்வாறே அசுத்தமாயை சகலர்க்கு தநுகரண புவன போகங்களாயிருக்கும். திரோதாயி இவைகளிலேயே ஆன்மாவை அழுந்தியிருக்கும்படி மயக்கும். கன்மம் ஆன்மாக்களுக்குப் பிறப்பு இறப்புக்களுக்குக் காரணமாயிருக்கும். நல்வினை தீவினைகளுக்கேற்ப தநுகரண புவனபோகங்கள் நல்லனவாகவும் தீயனவாகவும் கிடைக்கும். நல்வினையும் தீவினையைப்போல் பிறவிக்கே காரணமாகும். இன்பமும் துன்பத்தைப்போல் பந்தத்தைத் தருமேயொழிய விடுதலையைத் தராது. ஆணவமலம் "நான், எனது" என்ற பற்றுக்களாக நின்று மேலும் மேலும் வினையைச் செய்யும்படி ஆன்மாக்களைத் தூண்டும்.

மறுபிறப்புண்மை:—இம்மலங்களெல்லாம் தாமாக வேலை செய்ய மாட்டா. கடவுளின் ஆணையே இவைகளைச் செலுத்தும். கடவுளே பழைய வினைக்குத் தக்க அளவாக ஒவ்வொரு உயிருக்கும் அவ்வப் போது தகுந்த தநுகரணாதிகளைத் தருகிறார். ஒவ்வொருபிறவியிலும் உயிர்கள் தேடிக்கொள்ளும் வினையும் பழைய மூட்டையில் சேரும். இவ்வாறே ஒவ்வொரு உயிருக்கும் பிறவிகள் கடலின் அலைகள்போல ஓயாது வந்துகொண்டே யிருக்கும். எனவே கர்மவுண்மை, மறு பிறப்புண்மை யென்பன சைவத்துக்கு உடன்பாடே (Doctrines of Karma and re-incarnation)

தண்டனையும் கருணைச் செயலே:—குழந்தையின் மீது எவ்வளவு ஆசை மிகுதியாயிருந்தாலும் தகப்பன் அக்குழந்தை ஒரு தீங்கு செய்தால் அதை அடித்துத் திருத்துவான். அவ்வாறு அடிப்பது அவனது ஆசைகுறைவினாலல்ல. மேலும் மேலும் தீங்குசெய்யாமல் தடுத்துக் குழந்தையைத் திருத்தவேண்டு மென்ற நல்லெண்ணமே அவன் அடிப்பதற்குக் காரணம். அதைப் போலவே நமது தீவினைக் கேற்ற துன்பங்களை நமக்குக் கடவுள் தருவதால் அவருடைய காருண்யத்துக்குக் குறைவு ஏற்படாது. காருண்யத்துக் கழகு தீவினைக்காக உயிர்களைத் தண்டித்துத் திருத்துதலேயாம். இவ்வாறே இறப்பும் கருணையின் காரியமே. இவ்வுலகத்தில் இறப்பே இல்லை பிறப்புமட்டும் உண்டு என்றால், நாம் நிற்க இடமும் மூச்சுவிடக் காற்றும் இல்லாமல் போய் விடுமல்லவா? ஒரு வாழ்க்கையினால் வரும் கஷ்டங்களை யொழித்து இளைப்பாறுதல் வேண்டாமா? ஆகையால் தான் "அழிப்பு இளைப்பாற்றல்" என்று சைவ சமயம் கூறுகின்றது.

உயிர் பாசத்தை நீக்கும் வழிகள்:—இதுவரையில் பதிபசு பாசங்களின் உண்மையையும் இலக்ஷணங்களையும் கண்டோம். இனிப் பசு, பாசத்தை நீக்கி பதியையடைவதற்குரிய சாதனங்களையும் அவற்றால் வரும் பயனையும் கவனிப்போம். மாயையின் சேஷ்டையால் உலக இன்பத்தைப் பெரிதாக எண்ணி ஆணவத்தின் சேஷ்டையால் "நான், எனது" என்ற பற்றுக்களை வளர்த்து, கர்மத்தின் சேஷ்டையால் ஆன்மா நல்வினை தீவினைகளைப் புரிவதால்தான் பாசம் ஆன்மா

வைக் கட்டியிருக்கிறதென்று மேலே கண்டோம். எனவே பாசக் கட்டு ஒழிய வேண்டுமானல் இம்மூன்று சேஷ்டைகளேயும் ஒழிக்க வேண்டும். அதாவது உலக இன்பத்தைப் பெரிதாக எண்ணக் கூடாது, நான் எனது என்ற பற்றுக்களே வளர்க்கக் கூடாது, அவற்றின் காரணமாக நல்வினே தீவினேகளேச் செய்யக்கூடாது. இவைகளேச் செய்யக்கூடாது என்ருல் வேறு என்னதான் செய்வது என்ற கேள்வி உண்டாகும். மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்ற நான்கு அந்தக்காணங்களும் ஓய்வெடுத்துக்கொண்டு சும்மா இருக்க முடியாது. ஆகையால் இவைகளுக்கு வேறு வேலே கொடுக்கவேண்டும். அதுதான் கடவுளேப்பற்றிய வேலே. மனம் ஒரு குரங்குபோல ஏதாவது ஒரு கிளேயைப் பிடித்துக் கொண்டே யிருக்கும். இதைப் பற்றுக்கோடு என்று சொல்லுவார்கள். உலகம் மனதுக்கு ஒரு பற்றுக்கோடு. இதை விட்டால் மனதுக்கு வேறு ஒரு பற்றுக்கோடு தேவை. அதுதான் கடவுள் என்ற பற்றுக் கோடு. இவ்வாறே மற்ற மூன்று அந்தக்கரணங்களின் தொழிலும் இருக்கும். ஆகையால் உலகத்துக்குப்பதிலாகக் கடவுளேவைத்து ஆன்மா தன்துவேலேகளே யெல்லாம் செய்வதுதான் பாசக்கட்டை ஒழிப்பதற்கு உபாயமாகின்றது. இந்த உபாயம் நான்கு படிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன. இவை ஒவ்வொன்றிலும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு உட்பிரிவுகள் உள்ளன. இந்த சாதன முறைகளில் செல்வதற்கு முன் சமயப் பிரவேசம் என்ற ஒரு சடங்கு இருக்கிறது. அதற்கு தீக்ஷை அல்லது கண் திறத்தல் என்று பெயர். அதாவது ஞானக்கண் அல்லது சமயக் கண்ணேத் திறக்க வைத்தலாகும்.

சரியைத் தோண்டு :—சரியைத் தொண்டு என்பது கடவுளே எஜமானகை ஒரு உருவத்தில் கொண்டு எஜமானனுக்கு ஒரு வேலேக்காரன் எந்தெந்த உபசாரங்களெல்லாம் செய்யக்கூடுமோ அவைகளே யெல்லாம், அவ்வுருவத்துக்குச் செய்தல். அலகிடுதல், மெழுகுதல், பூக்கொய்தல், பூத்தொடுத்தல், இன்னும் இவைபோன்ற மற்ற காரியங்களெல்லாம் செய்தல். இவ்வாறு செய்வதால் உலகப் பொருள்களில் தான் வைத்துள்ள பற்று கொஞ்சம் கொஞ்சமாக விட்டுக் கொண்டேவரும். தனக்கென ஒன்றும் செய்யாமல் கடவுளுக்கென்றே செயல் நிகழ்வதால் ஆணவமலமும் கொஞ்சம்கொஞ்சமாகத் தேய்ந்து வரும். இத்தொண்டை தாசமார்க்கம் என்றும் கூறுவது இயல்பாம்.

கிரியா மார்க்கம் :—கிரியைத் தொண்டாவது உருவத்திலே கடவுளே எழுந்தருளச் செய்து அபிஷேகம் போன்ற பதினறு வகையான உபசாரங்களேச் செய்து, தீயை வளர்த்து அதையும் கடவுள் உருவாக எண்ணி உயிர் வதை யில்லாத வேள்வியைச் செய்தல். இங்கே 'நான்' என்ற பற்றும் 'எனது' என்ற பற்றும் மிகுதியாக நீங்கும். இம்மாதிரியான வேலே கடவுளேத் தகப்பனகைப் பாவித்துப் பிள்ளே செய்யும் உபசாரத்துக்கு ஒப்பிடப்பட்டு, கிரியைத் தொண்டுக்கு சத்புத்ரமார்க்கம் என்ற பெயரும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

யோகமும் ஞானமும் :—யோகம் என்பது உடம்பின் கூறுகளை நன்றாய் அறிந்து பிராண வாயுவைத் தன்வசப்படுத்தித் தொழிற் படுத்தி உடம்பினுள்ளிருக்கும் ஒளிவடிவான கடவுளைக் கண்டு வழி பட்டு இன்பம் அடைதல். இதைக் கடவுளும் தானும் சிநேகிதர்கள் போல அளவளாவும் தன்மைக்கு ஒப்பிடுவர். இந்த வழிக்கு சஹ மார்க்கம் என்று பெரியோர்கள் பெயரிட்டுள்ளார்கள். எல்லாவற்றி லும் சிறந்தது ஞானமார்க்கம். இதில் ஞான சாத்திரங்களை யெல் லாம் கசடறக்கற்று அவைகளின் முடிபுகளைத் தனது வாழ்க்கையில் பதித்து ஒழுகுவது முதலிய செயல்கள் நடைபெறும். இவ்வழியைப் புருஷன் பெண்சாதி இருவரும் களங்கமின்றிப் பரிசுத்தமாக நடத் தும் வாழ்க்கைக்கு ஒப்பிட்டு இதற்கு சன்மார்க்கம் என்ற பெயரைப் பெரியோர்கள் கொடுத்துள்ளார்கள்.

ஆன்ம லாபங்கள்:—இந்த நான்கு சாதன முறைகளால் ஆன்மா வுக்குக் கிடைக்கின்ற லாபங்கள் மூன்று. அவை இருவினை யொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம் என்பனவே. இருவினையொப்பு என் பது இன்பத்தையும் துன்பத்தையும் விருப்பு வெறுப்பின்றிக் காணு தல். மலபரிபாகம் என்பது ஆணவமலத்தினுடைய சத்தி குறைந் தொழிதல். சத்திநிபாதம் என்பது கடவுளுடைய திருவருளானது ஆன்மாவில் வந்து பதிதல். இவ்வாறு திருவருள் கைகூடினால் ஆன் மாவானது எடுத்த அப்பிறவியுள்ள வரையில் பிராரத்வ கர்மத்தை யனுபவித்துவிட்டுப் பிறகு சிவசாயுச்சிய பதவியென்ற பரமுத்தி யைப் பெறும்.

எவ்வளவு ஞானம் முதிர்ந்தவனாயிருந்தாலும் கோயில் வழி பாடும் அன்பர் கூட்டுறவும் வேண்டும். இல்லாவிட்டால் ஆணவ மலம் மீண்டும் தொடர்ந்து வலிபெருக்கும். ஜீவன் முக்தனுக்கும் ஆணவ மலம் “மாயாதே தன் சக்தி மாய்ந்து” நிற்கும் நிலைதான் கிடைக்கிறது.

அணைந்தோர் தன்மை :—இந்த முடிந்த முடிபாகிய நிலையிலிருப் பவர்கட்கு ஜாதி, குலம், கோத்திரம், நாடு, மொழி, உற்றார், உறவினர், நண்பர், பகைவர், நன்மை, தீமை முதலிய உலகத்திலுள்ள தொடர்பு கள், வேற்றுமைகள் எவையும் கிடையா. இவைகள் இல்லாதிருப்ப தே சைவ சித்தாந்தத்தின் முடிந்த முடிபான நிலை.

சைவ நூல்கள் :—சைவ சித்தாந்தத்தின் உண்மைகளெல்லாம் தேவாரம், திருவாசகம், பெரிய புராணம் முதலிய பன்னிரு திரு முறைகளிலும், சிவஞானபோதம், சித்தியார் முதலிய பதினான்கு சாத்திரங்களிலும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. இம்மட்டில் சைவ சித்தாந்த சாஸ்திர ஆராய்ச்சியை நிறுத்திக்கொண்டு மிகச் சுருக்க மாக சைவ இளைஞர்கள் தெரிந்து கொள்ளவேண்டியவைகளையும் செய்யவேண்டியவைகளையும் எண்ணிட்டுத் தொகுத்துக் கூறலாம் என்று நினைக்கிறேன். அவை கீழ்வருவனவேயாம்.

இருபது முடிபுகள்:—(1) கடவுள் ஒருவர் உண்டென்று நம்ப வேண்டும். (2) அவரே இவ்வுலகத்தைப் படைத்துக் காத்து அழிக்

கிறார் என்று அறியவேண்டும். (3) உயிர்கள் இயல்பாகவே உலகத்திலே பற்றுடையனவாக வுள்ளன என்பதை அறியவேண்டும். (4) இந்தப்பற்று நான், எனது என்ற இருவகையாகவுள்ளதென அறிய வேண்டும். (5) இவ்வுலகத்திலே உயிர்கள் செய்கின்ற காரியங்கள் எல்லாம் இப்பற்றுக்களின் காரணத்தாலே உண்டாகின்றன என்று அறிய வேண்டும். (6) உலக வாழ்வில் உயிர்கள் இன்பம் அனுபவிப்பது போலக் காணப்படினும் மிகுதியும் துன்பத்தையே அனுபவிக்கின்றனவென்று நன்ருய் உணர வேண்டும். (7) ஆகையால் உலகத்திலுள்ளபற்றை யொழித்தால்தான் உயிருக்கு உண்மையான இன்பம் கிடைக்குமென்று அறிய வேண்டும். (8) ஆகையால் உலகப் பொருள்கள்மீதுள்ள பற்றை விட்டு கடவுள்மீது அன்பு செலுத்த வேண்டும். (9) கடவுள் உயிர்களிடத்து அளவற்ற கருணை உடையவரென்றும், தன்னைச் சரணமாக அடைந்தவர்களுடைய துன்பத்தைப் போக்கி இன்பத்தைக் கொடுக்கின்ருரென்றும் உணர வேண்டும். (10 கடவுளை அடைவதற்குச் சிறந்த உபாயங்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு வழிகள் என்பதை நன்குணர வேண்டும். (11) இவ்வழிகளிற் சென்ருல் கிடைக்கும் இலாபங்கள் இருவினை யொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம், சிவசாயுச்சியம் என்று மிக நன்ருக உணரவேண்டும். (12) எவ்வளவு ஞானம் முதிர்ந்தாலும் திருக்கோயில் வழிபாடு, அன்பர்கள் கூட்டுறவு என்பவற்றைக் கைவிடக் கூடாது என்று அறிய வேண்டும். (13) எக்காலத்திலும் எல்லாவுயிர்கட்கும் இயன்றவரை நன்மையே செய்தலாலும் அவைகளின் துன்பத்தைப் போக்குதலாலும் அன்பர்கள் கூட்டுறவு கிடைக்கும் என்பதை நன்குணர வேண்டும். (14) பேரின்பத்திற்குச் சாதனமான அறிவு அல்லது ஞானம் அடைய வேண்டுமாளுல் சிவஞானபோதம் முதலிய பதிநான்கு சித்தாந்த சாஸ்திரங்களையும் முக்கியமாக தேவாரம், திருவாசகம், பெரியபுராணம் முதலிய பன்னிரு திருமுறைகளையும் தினந்தோறும் இயன்ற அளவு ஐயம் திரிபு அறக் கற்க வேண்டும். (15) நாடோறும் இயன்றவளவு உயிர்கட்கு நன்மையைச் செய்ய வேண்டும். (16) அருளுக்கு அடிப்படையான புலால் மறுத்தல் என்ற தர்மத்தைக் கைக்கொள்ள வேண்டும். (17) தினந்தோறும் செய்யும் எல்லாக் காரியங்களையும் "எனக்காக நான் செய்கின்றேன்" என்ற எண்ணத்தோடு செய்யாது, "கடவுள் திருவருள் இவ்வாறு என்னைக் கருவியாகக் கொண்டு இவைகளைச் செய்விக்கிறது" என்று உண்மையாகவே எண்ணிச் செய்யும்படி பழக்கம் செய்து கொள்ளவேண்டும். (18) "நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற பழமொழியின்படி நமக்குக் கிடைக்கும் இன்பத்தைப் பிறருக்கும் பங்கிட்டுத் தரவேண்டும். (19) நாம் மட்டும் நன்னெறியில் ஒழுகுவதோடு நில்லாது பிறரையும் நன்னெறியில் ஒழுகும்படி செய்யவேண்டும். (20) "எவ்வுயிரும் நீங்கா துறையும் இறை சிவனென்று, எவ்வுயிர்க்கும் அன்பாயிரு" என்ற ஆன்ருேர் வாக்கின்படி நமது வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியையும் நடத்தவேண்டும். ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி.

Sadhu Press, Madras.

இறைவன் துணை.

கௌமார குருகுலக்
கல்விப் பிரசுரம் 1.

சமயமும் ஒழுக்கமும் 4.

ஸ்ரீ:

வைணவ சமயம்.

ஆசிரியர்.— ஸ்ரீமான் எஸ். கே. பார்த்தஸாரதி, பி. ஏ., பி. எல்.,
டிஸ்டிரிக்ட் முன்ஸிப், மன்னார்குடி.

கடவுளை அடைந்து நாம் உஜ்ஜீவித்து முக்த நிலையடைவதற்குச் சாதனமானவையே மதங்கள். அவ்வித மதங்கள் வெளிப் பார்வையில் முரண்படுவதாகத் தோன்றினும், தாயுமானவர் "ஆறு சமயங்கள் தோறும் வேறு வேருய் நின்று ஆடும் உன் திருவிளை யாவ ரறிவர்" என்று கூறியபடி கடவுளே ஒவ்வொரு மதத்திலும் இருக்கின்றார். கீதையில் 'எவ்வழியில் நீங்கள் வந்தாலும் அவ்வழியில் இருந்து உங்களை ஏற்றுக் கொள்கிறேன்' என்று பகவான் மாற்றம் இருக்கிறது. அவ்வித மதங்களில் விசேஷமான ஒன்று வைணவம்.

கடவுளை அடைவதென்றால் கடவுள் தன்மையைப் பொருந்துதல். அவ்வித குணங்களைக் கூட்டுவதே ஒரு மதத்தின் வேலை. "சாதுர்வர்ணம் மயா சிருஷ்டம் குண கர்ம விபாக:" "அந்தணர் என்போர் சான்றாண்மை பூண்டொழுகலால்", என்றபடி. ஆகையால், வைணவன் என்பவன் யார் என்று விசாரிப்போம். (விஷ்ணுபுராணம்—யமகிங்கர ஸம்வாதம்—காந்தியடிகள் 'வைஷ்ணவ ஜனதோ'):

சொல்வன் வைஷ்ணவன் யாரெனக் கேளாய்
சோர்ந்தவர் பீடையை அறிவானே
எல்லோர் தம் துக்கத்தை தீர்ப்பவ னாயினும்
எள் ளளவும் கர்வம் அடையானே
மன்னுயிர் மக்களை வந்தித்து நிற்பான்
மாசுறு நிந்தனை மொழியானே
சொன் மன முட லதில் சுத்தம தானவன்
சோதி யுடல் மக்கள் என்போனே.

பாவனப் பார்வை ஸமத்வ முற்று
பர ஸ்திரீயைத் தாயெனப் பணிவானே
நாவினல் பொய் மொழி நவிலவு மாட்டான்
நெர்ந்தும் பிறர் செல்வம் வேண்டானே
மாயையும் மோகமும் மாயும் அவன்பால்
மனத்தில் வைராக்கிய முறுவோனே
ஓயாமல் தேவனை உள்ளம் நினைந்திட
ஓதி உன்னி மன முருகுவோனே

காமமும் லோபமும் கபடமும் கோபமும்
கனவிலு மில்லாத கனவானே
பாமரர் தேர்ந்திட பற்பல கருமமும்
பகவனின் தொண் டெனச் செய்வோனே.

விஷ்ணு பக்தனுகிய வைஷ்ணவனை வர்ணிக்கிறேன். எவன் பிறருடைய துக்கத்தை யறிந்து அவருக்கு உபகாரம் செய்த போதிலும், தான் செய்ததாக மனதில் கர்வங் கொள்ள மாட்டானே, எவன் உலகிலுள்ள எல்லோரையும் ஸமமாகப் பார்ப்பானே, அவர்களை யெல்லாம் பகவானுடைய சரீரமென் றறிந்து வணங்குவானே, எவன் பிறர்களுடைய பொருள் ஸ்திரீ முதலியவற்றில் ஆசை வைக்க மாட்டானே, எவன் தன்னுடைய மனம் வாக்கு காயம் மூன்றையும் அடக்கி யாள்கின்றனே, எவன் பகவானுடைய பெயரைக் கேட்டதுமே பக்தி பரவசனுகி விடுகின்றனே, எவன் தன்னை அவருடைய கருவியாகக் கருதி எல்லா கருமங்களையும் அவருக்குக் கைங்கர்யமாகவே செய்கின்றனே, அவனே வைஷ்ணவனுவான். பல சரீரங்களை யடையும் ஜீவனுக்கு மனித தேகம் கிடைப்பது கஷ்டம். அவ் விதமான பல ஜன்மங்கள் எடுத்த பிறகே வாஸுதேவனை பஜித்து எல்லாம் வாஸுதேவன் என் றறியும் விஷ்ணு பக்தனுக முடியும். அவ்வித விஷ்ணு பக்தனுவதற்கு நான் என்னுடைய காயம், வாக்கு, மனது, இந்திரியங்கள், புத்தி முதலியவைகளால் என்னென்ன செய்தாலும், என்ன உண்டாலும், என்ன யாகம் செய்தாலும், என்ன தானம் செய்தாலும், என்ன தபஸ் செய்தாலும, எல்லாவற்றையும் பரம் பொருளாகிய ஸ்ரீமந் நாராயணனுக்கே அர்ப்பணம் செய்யவேண்டும்.

நான் சிறந்த விஷ்ணு பக்தனாய்ப் பாகவத உத்தமனாக வேண்டுமானால் எல்லாப் பிராணிகளிடத்தும், வஸ்துக்களிடத்தும், பகவான் இருக்கின்றார் என்று அறிந்து, எல்லோரையும் ஸமமாகப் பாவித்து, என்னுடைய தேகத்தின் ஜன்மத்தாலும் கர்மத்தாலும் வர்ணாச்ரமங்களாலும் ஜாதியாலும், "நான்" என்ற அஹங்காரம் கொள்ளாமல், ஒருவரிடத்திலும் த்வேஷமில்லாமல், எல்லோருக்கும் மித்ரனாய், கருணையோடு கூடி, கெடுதி செய்பவர்களிடத்தும் பொறுமையையும் ப்ரீதியையுங் காட்டி, துக்கத்திலும் ஸந்தோஷத்திலும் ஸம நினைவுடையவனாய், கோபம் முதலியன இல்லாது, ஆனந்த மூர்த்தியாய், மனதை ஒரு வழிப் படுத்தி, என்னுடைய உடல் பொருள் ஆவி மூன்றையும் பகவானுக்கே அர்ப்பணம் செய்ய வேண்டும்.—ப்ரபத்திமார்க்கம்—"ஸர்வதர்மான்" என்ற சுலோகம் பார்க்க.

மோக்ஷத்தில் சரீர இன்பங்கள் நுகர்வதில்லை; மனோ ஆனந்தம் கொள்வதும் மாத்திரம் இல்லை—நாம் மானிடத் தன்மை நீங்கி கடவுள் தன்மையாதல். விஷ்ணு உலகத்தை ரக்ஷிப்பதால் நாமும் அத்தொழிலில் சேர்கிறோம் இப்பொழுது முதல் பெண்கள் பிள்ளைகளாகிய நாம் அவருடன் கூட்டாளிகளாகிறோம். வேலை செய்யச் செய்ய மேலான வேலை கிடைக்கிறது. வேலைக்குப் பலன் வேலையே. கைங்கர்யமே வைஷ்ணவனுடைய குணம், பெருமை, முக்தி, ஆனந்தம்.—"ஓம் நமோ நாராயணாய."

எனக்கெனச் செயல் வேறிலை யாவு மிங்கொரு நின்
றனக்கெனத்தகு முடல்பொரு ளாவியுந் தந்தேன்
மனத்தகத்துள வழுக்கெலா மாற்றி யெம்பிரானீ
நினைத்த தெப்படி யப்படி யருளுத னீதம்.

உளவ திங்கெலாநின்செய லாமென வுணர்ந்தோர்க்
களவி லானந்த மளித்தனை யறிவிலாப் புன்மைக்
களவுநாயினேற் கிவ்வண்ண மமைத்தனை கருத்துத்
தளருந் தன்மையிங் காரொடும் புகலுவேன் றக்கோய்.

"என்னுயிரும் என்னுடலும் என்பொருளும் யானே
யிசைந்து கொடுத்திட வாங்கிவிட்டதன் பின் மகிழ்ந்தே
தன்னுயிரும் தன்னுடலும் தன்பொருளும் எனக்கேதந்து
கலந்தென்னைப் புணர்ந்த தனித்த பெருஞ்சுடரே".

ஒரு ஜன்மம் மாத்திரம் உண்டு என்னும் மதங்களிலும் (Grace) காருண்யம் (கிருபை) உண்டு என்று கூறியிருப்பினும், அக் கிருபை பக்ஷபாதத்தின் தன்மையதாகிறது. பல பிறப்பும் பிறந்து அப் பிறப்புகளில் கெட்டன செய்தும், ஜீவன் மனம் வருந்தி வேண்ட, கடவுள் கிருபை காட்டி ஜீவனை ரக்ஷிப்பதுவே விசேஷம். நாம் ஒரு அங்குலம் நகர அவர் ஒரு கெஜம் ஓடி வருவார். அக் குணத்தையே உவமைப்படுத்தி 'லக்ஷ்மி' என்று கூறியுள்ளது.

ஸ்திரீகள் மோக்ஷமடைவது ஸுலபம்; சூத்திரர்கள் மோக்ஷமடைவது ஸுலபம். ஏனெனில் கைங்கர்ய குணமும் தொழிலும் அவர்களிடம் உள்ளன. "கலி:ஸாது, ஸ்திரீ:ஸாது, சூத்திர:ஸாது". பல பிறப்புகளின் பின் வைணவத்வம் வந்து "வாஸுதேவ: ஸர்வம்" என்றறிந்து கிங்கரனாகிறான்: "கடவுள் ஆலயத்தைத் தாங்கும் தூண்களாகின்றான்" ("Pillars in the temple of my Lord"). கடவுளுடன் ஒன்றுவது தன்மையிலும் வேலையிலும். கடவுளுடன் பாகஸ்தர்களாய் அவர் ராஜ்யத்தில் உரிமையுடையவர்களாய் உண்மை 'மகன்' ஆகிறோம். ராமலிங்க ஸ்வாமிகள் 'திருவருட்பா'வில் "சிருட்டிமுதல் ஐந்தொழில் நான் செய்ய எனக்கு அருள் புரிந்தாய்" என்கிறார். "புனிதமுறு சுத்த சன்மார்க்க நெறி காட்டி மெய்ப்பொருளினையுணர்த்தி யெல்லாம் ஏருற்ற சுகநிலை யடைந்திடப் புரிதி நீயென் பிள்ளையாதலாலே யிவ்வேலை புரிக என்று இட்டனன்."

ஜாதி, குலம், முதலிய வித்யாஸமின்றி எல்லோர்க்கும் ஸம்மதமான மதம் இம்மதம் ஆகையால் இதுவே உலக மதம், கடவுளின் முக்ய லீலை மதம். எல்லோரும இம் மதத்தின் தத்வத்தை அனுஷ்டித்து பகவான் அருளால் எளிதில் நற்பதவி யடையலாம்.

பாரதி பிரஸ், மன்னார்குடி.

இறைவன் துணை.

கௌமார குருகுலக்
கல்விப் பிரசுரம் 1

சமயமும் ஒழுக்கமும் 4 (1)

வைணவ சமயம்.

ஆசிரியர்:—கே.எஸ். ஸ்ரீநிவாஸாச்சாரியார், எம். ஏ., பி. எல்..
ரெவினியூ டிவிஷனல் ஆபிஸர், மன்னார்குடி.

வைணவம் பிராமண மத மல்ல.

வைணவ சமயத்தைத் தற்காலத்தில் நிலைநாட்டியவர் இராமானுஜரே ஆயினும், வைணவ மதம் பிராமணுள் மதம் என்ற எண்ணம் உதிக்கக் கூடாது. ஏனெனில்:—

(1) இம் மதத்தின் ஆதி ஆதாரம் வேதமும் வேதாந்தமுமே. இதை முதலில் தெரியச் சொன்னவர் சூத்திரகுலத் திலகரான ஆதிவெண் சடகோபரென்னும் ஆழ்வாராதிகள் திலக ரத்னமான நம்மாழ்வார்.

(2) ராமானுஜரின் ஆப்த நண்பரும் ஆசாரிய முறையில் அவரால் வகிக்கப்பட்டவருமானவர் சாத்தாதவ குலத்தில் உதித்து ஸ்ரீ வரதராஜப்பெருமாளுக்கு பரமபக்தரான திருக்கச்சி நம்பி என்று வழங்கிவரும் பெயரை யுடைய காஞ்சிபூர்ண ரேயாவர். இவர் பிராமணரல்ல.

(3) ராமானுஜர் சரித்திரத்தில் அதி முக்கியமான சம்பவம் என்ன வென்றால் கோஷ்டி பூர்ணரிடம் 18 தடவை திருக்கோட்டியூருக்கு நடந்து, பின்பு அதில் அவரால் உபதேசிக்கப் பெற்ற, திருவஷ்டாக்ஷர மந்திரம் பரம ரகசியமென்றும் அவ்வாசிரியராணையை மீறி அம் மகாமந்திரத்தைப் பிறருக் குபதேசித்தால் நரகப்ராப்தி விதித்தமென்று அறிந்த நம்மாச்சாரியப் பெருமாள், அம் மகாமந்திர பலத்தால் உலகத்து ஆன்ம கோடிகள் உஜ்ஜீவித்து மோக்ஷ மடைவது திண்ணமென பூர்ண நம்பிக்கையுடன் தான் ஒரு ஆத்மா நாசமடைவதைப் பொருட்படுத்தாமல், அதிக காருண்யத்துடன் அம்மந்திரத்தை அவ்வான்மகோடிகள் உய்யுமாறு வெளிப்படையாக அதி சுலபமாகத் தெரிவித்தார்.

(4) பிறப்பினுலேயே உண்டாகும் ஜாதி பேதங்களைக் கொண்டு உயர்வு தாழ்வு பாராட்டும் இக் காலத்தவர் ராமானுஜரை மேற்கோளாகக் கூறமுடியாது. சாத்தாதவ குலத்துத் திருக்கச்சி நம்பியைப் பெரியோராய் மதித்த இவர் யதீந்திரான பிறகும் கீழ்ஜாதி எனமதிக்கப்படுவோரிடம் விசுவாசமும் நன்றியறிதலும் பாராட்டி அவரை பிராமணரைப்போலவே மோக்ஷத்துக்கு அருஹரென்றே பாவித்தார். குலோத்துங்க சோழன் கொடுமைக் கஞ்சி நாட்டை விட்டு ஓடியபோது, வழியில் காட்டிலுறையும் வேடர்குடிசையில் தங்கி அவரிட்ட அன்னத்தைப் புசித்து அவர்களை நன்மார்க்கத்தில் நடக்கச் செய்தார்.

மேல்ஜாதியாரின் முக்கியக் கடமை.

பஞ்சமர்களுக்குப் பறையரெனும் இழிப் பெயரை மாற்றி திருக்குலத்தார் எனும் பெயரைச் சூட்டி, கோயிலில் பகவான் ஸன்னதியில் பலிபீடம்வரை அவர்கள் செல்வதற்கு அதிகாரம் கொடுத்து, ஆலயத்தில் திருக்குளத்தில் ஸ்நானம் செய்யவும், வைஷ்ணவர்களுக்குரிய பஞ்சஸம்ஸ்காரங்கள் பெறவும், திவ்யப்ரபந்தங்களைப் படனம்செய்து மோக்ஷ அருகர்களாகவும், இத்தியாதி உரிமைகளைத் தந்தருளின ராமானுஜர் மதத்தைக் கைப்பற்றின பிற்கால வைணவர் அவருடைய கொள்கைகளை மறந்தனரோ? அல்லது வெறுத்தனரோ? (Elevation of the depressed classes) அடக்கப்பட்ட ஜாதியாரின் மேலேற்றம் என்பது இக்காலத்தில் இராஜீய மேல் நோக்கத்திற்காக ஒரு வீண்பதமாக (catchword) உபயோகிக்கப்படுகிறதேயொழிய அதின் சாரத்தைக் கிரகித்து நடப்பதைக் காணேம்.

850ம் வருஷங்களுக்குமுன் ராமானுஜரால் ஆரம்பிக்கப்பட்ட இந்த நற் காரியம் இவ்வளவு வருஷங்களில் பூர்த்தியடைந்து இப் பஞ்சமர்களெனப்படுவோர் நம் ஸமூகத்து ஒரு பலத்தை அடிப்படையாய் இருப்பதுபோய், ராமானுஜர் மதஸ்தர்களான வைணவரின் அசட்டையினுல், குற்றத்தினுல், (criminal folly) குருநாதருடைய போதனைகளை அறவே மறந்தோ, வெறுத்தோ, பாபமே அவர்களைத்தாண்ட நம் தேச முன்னேற்றத்திற்கு இப் பஞ்சமர்களை ஒரு தடையாக்கிக் கொண்டனர்.

ஆயினும், காலச்சக்கரம் சுழன்றுவருகிறதால், வைணவர் அவர்கள் பாவத்தை அனுபவிக்குங் காலம் ஸமீபித்திருக்கிறது. நாம் எதிர்பாராவண்ணம் அடக்கப்பட்ட ஜாதியாராகிய பஞ்சமரெனப்படுவோர், மூலபலம்போன்ற சக்தியை

உடையவர்களாய், மேல்கிளம்பித் தங்கள் முன்னேற்றத்தைத் தம் முயற்சியாலேயே அடைவாரென்பது திண்ணம். அக் காரியத்திற்கு அனுகூலமாய் அவர்கள் செய்யும் பிரயத்தனத்தில், மேல்சாதியென மதித்துக்கொள்ளுபவர்களை ஆழ்ந்த தண்ணீரில் அமிழ்த்திவிடாமுன்னம், அப் பஞ்சமரை உயர்த்துவதில் மேல்ஜாதியெனப்படுவோரும் சிரத்தையுடன் உழைப்பதே தர்மம், நீதி, நம்தேச க்ஷேமத்துக்கு அத்தியாவசியம் என்பதைச் சிக்கிரம் காலதாமத மன்னியில் நா மறியவேண்டும்.

வைணவ விசிஷ்டாத்துவைத தத்துவங்கள்.

தத்துவ விசாரணை என்றால் நம் அனுபவத்திலுற்ற விஷயங்களை ஒழுங்குபடுத்துவதேயாகும். (Unification of the diversity of experiences). அப்படி ஒழுங்குபடுத்தும் போது மூன்று பெரிய விஷயங்களுள், யாவற்றையும் அடக்கலாம்:— (1) ஜீவாத்மா (Soul) (2) பரமாத்மா (God) (3) ப்ரகிருதி (matter). ஆனால் தத்துவஞானிகள் இம் மூன்றும் தனித்தனியே நித்தியங்கள் என்று எண்ணித் திருப்தியடைவதில்லை ராமானுஜமதமாகிய வைணவசமயத்தை, விஷிஷ்டாத்துவைதத்தை, அறியவேண்டுமானால் சங்கராருடைய அத்துவைதத்தை அறிந்துகொள்வது அவசியம். ஏனெனில் அத்துவைத மதத்தாத்பரியங்கள் அவர் மனதிற்குத் திருப்தி தரவில்லை. வேதாந்தங்களுக்கும் உபநிஷத்துக்களுக்கும் அவை விருத்தமென்றெண்ணி, வேறுவிதமான தாத்பரியங்களைத் தன் கிரந்தங்களில் தெரிவித்துத் தன் மதத்தில் பரவச்செய்தார். இவ்விரு ஆசாரியார்களுக்கும் முக்கியபேதங்களாவன;—

(1) இருவரும் கடவுள் (பிரம்மம்) ஒருவரே என்றும், ஜீவனும் பிரகிருதியும் கடவுளின் சக்தி (attributes) யென்றும், கொள்கையுடையரேனும் அப்பிரம்மத்துக்கும் ஜீவன் ப்ரகிருதிகளுக்குமுள்ள பேதாபேதங்களைக் குறித்துச் சொல்லும் போது முரண்படுகிறார்கள். சங்கரர்கொள்கை சித், அசித், அதாவது ஜீவன், பிரகிருதி ஆகிய இரண்டும் நிஜமல்ல. ப்ரம்மம் ஒன்றே நிச்சயமான பொருள். ஜீவனென்றும் பிரகிருதி என்றும் தோற்றுபவை அவித்யா அல்லது அஞ்ஞானத்தால் உண்டாகும் தோற்றங்கள். ராமானுஜர் கொள்கையோ ஜீவனும் பிரகிருதியும் நிஜமான தத்துவங்கள், பொருள்கள். இவை பிரம்மத்தின் சக்திகள். விஷிஷ்டாத்வைத மதத்தில் பரபிரம்மம் சரீரி அல்லது பரமாத்மா. ஜீவனும் பிரகிருதியும் அப் பரமாத்மாவின் சரீரம். இதுவும் அத்வைதமே யாயினும் சங்கரர் அத்வைதத்தினும் விசிஷ்டமானது.

(2) சிருஷ்டி என்பது அத்வைத மதத்தில் நிஜமல்ல. சுத்தப்பிரம்ஹத்தை அவித்தை மூடிக்கொள்ள அது மறைபட சிருஷ்டிஎன்னும் விவிதங்களாகக் காணப்படுகின்றன. விசிஷ்டாத்வைதத்திலோ பிரஹ்மன் தன் இணைபிரியாத சக்தி அல்லது விசேஷங்களாகிய, சித், அசித் இரண்டையும் வெளியாக்கிக் காட்டுவதே சிருஷ்டியெனப்படும். இப்படி பிரம்ஹம் சிருஷ்டி செய்வது அவருக்கு லீலை, விளையாட்டு. ஆதியில்லாத கர்மத்தின் பல பிராப்தமாக ஜீவன்களுக்குச் சரீரங்களைத் தந்து சுயேச்சையுடன் (free-will within limits) அந்த ஜீவன்கள் மறுபடிசெய்யும் கர்மங்களின்படி பாவங்களை அனுபவிக்கிறார்கள்.

(3) இருசாரார்க்கும் வேதமும், ஸ்மிருதிகளுமே பிரமாணம். இதனால் புத்திக்கு இடமில்லை யென்பதல்ல. இந்திரியாதி விஷயங்கள் ஆராய்ச்சியில் புத்தியை செலுத்தலாம். அல்லது வேதங்களின் அர்த்தங்களைக் கிரஹிப்பதற்கு அதை உபயோகிக்கலாம். நமக்கு அகோசரமான விஷயங்களில் புத்தியின் ஸகாயம் பலப்படாது. அப்படி அகோசரமானவைகளே வேதங்களும் உபநிஷத்துக்களும்; அவைகளில் அடங்கியிருக்கும் அரிய விஷயங்கள். இந்திரியவிஷயங்களில் மாத்திரம் பிரவிருத்திக்கும் நமது புத்திக்கும் எட்டாதவைகளும் நம்மிலும் மேன்மையான ஜீவன்கள் சுவானுபவத்தால் அதாவது ஆத்மஞானத்தால் அறியும் பெரிய விஷயங்களாகும். இப்படிச் சொல்வது ஒவ்வாதென்று எண்ண இடமில்லை. இந்திரிய விஷயங்களிலும் கூட நம் புத்திக்கெட்டாத விஷயங்களை நம்மிலும் பெரியவர்கள் இந்திரிய அபிப்பிராயங்களினால் கண்டுபிடித்திருப்பவைகளை நாம் நிஜமென்று ஒப்புக்கொள்ளவில்லையா? அப்படியிருக்க ஆத்மவிசாரங்களில் மிகுந்த அனுபவங்களுற்ற மேன்மையரன ஜீவாத்மாக்கள் சுவானுபாவங்களாலும், மற்ற வகையாலும் அறிந்து வேதங்களில் முறையிட்டுள்ளார் என்றால் அவைகளை நாம் என் நம்பக்கூடாது?

இத்தகைய நியாயங்களினால் இரண்டு ஆசாரியர்களும் வேதமும், உபநிஷத்தும் பகவான் வாக்கிய மென்று நம்பி அவைகளையே மேற்கோளாகக்கொண்டு தம் மதங்களை ஸ்தாபித்துள்ளார். ஆயினும் அந்த உபநிஷத்துக்களிலேயே பிரம்ஹம், அசித், சித் இவைகளைப்பற்றி ஒன்றுக்கொன்று நேர் விரோதமான அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.

சில இடங்களில் பிரஹ்மம், நிர்க்குணம், குணரஹித மென்றும் மற்ற இடங்களில் பிரஹ்மம், நித்யன், ஸத்யன், அத்வைதன், விபு, சர்வஞ்ஞன், சர்வசக்தன், ஞானி என்றும்

கூறப்பட்டுள்ளது. இந்நிலைமையில் உபநிஷத்துக்கள் ஒன்றும் பொய்யாகா வாகையால் சங்கரர் கொள்கை பிரம்ஹம் நிர்க்குணன் தானென்றும் சில உபநிஷத்தில் குணங்களுடன் கூடியதாகச்சொல்லப்படுவது மாயையுடன் கூடின அபரம் அல்லது கார்ய பிரஹ்மம் என்பது. இராமானுஜர் கொள்கை அப்படியல்ல சத் சித் முதலிய குணவிசேஷங்களையுடையதே பிரஹ்மம். சில உபநிஷத்துகளில் நிர்க்குணன் என்று சொல்லப்படுவதின் தாத்பர்யம் என்னென்றால் பிரம்ஹனுக்கு இழிவான குணங்கள் (அதாவது மாறுதல், இறப்பு, துக்கம் முதலியவை) கிடையா என்பதே. ஜீவகோடிகளிலும் பிரகிருதியிலும், பரமாத்மா அந்தர்யாமியாய் நிறைந்துள்ளார். பிரஹ்மனை அறிய முடியாது என்பதின் தாத்பரியம், சங்கரர் கொள்கைப்படி பிரம்ஹனன்றி ஆன்மாவில்லை; அதனால் முடியாதென்பது. இராமானுஜர் கொள்கையோ பிரம்ஹத்தின் ஒப்பற்ற குணங்கள் நம் மனதிற்கும் புத்திக்கும் எட்டாதவைகள். ஆகையினாலே அப்பிரம்ஹத்தை அறியமுடியாது

(4) இந்த ஜகத்திற்குக் காரணபூதம் பிரஹ்மமே. வேதாந்திகள் அபிப்பிராயப்படி காரணமும், காரியமும் முடிவிலொன்றே. ஆகையால் ஜகத்துக்கும், சிருஷ்டிக்கும் கர்த்தா பிரஹ்மனே; தன்னிடத்திலிருந்தே, அதாவது தானன்றி வேறு பொருளின் உதவியில்லாமலே, அவைகளை சிருஷ்டித்தார். பாண்டங்கள் செய்யும் குயவனும் அவரே, மண்ணும் அவரே. பரிநாமத்தால் மாறுதல் (modification) அடைகிறார்.

இராமானுஜர் கொள்கை யாதெனில் சூக்ஷ்ம நிலையிலுள்ள ப்ரஹ்மன் ஸ்தூலநிலையடைதலே ஜகத்தெனப்படும்; சங்கரர் கொள்கையோ இம் மாறுதல் அதாவது சிருஷ்டி நிஜமல்ல, விவர்த்தம், அவித்யா என்றும் மாயையின் செயல் என்றும்சொல்லுகிறார்.

(5) அவித்யை அல்லது மாயை என்று சங்கரர் சொல்லுவதை ராமானுஜர் முற்றுமே அநேக வாதங்களால் கண்டித்துள்ளார். அவித்யை என்பது பிரம்ஹத்தினின்றும் வேறு என்றால் பிரம்ஹம் ஒன்றே என்பதற்குப் பழுது உண்டாகும். இரண்டும் ஒன்று என்பது வியர்த்தம். இந்த நிலைமையில் சங்கரர் மாயை நிஜம் பொய் என்று வர்ணிக்க முடியாததென்று முடிவு சொல்லுகிறார்; ஸத், அஸத் நிர்வசம் என்கிறார்.

முக்கியமான அம்சங்களை மேலே யெடுத்துச் சொன்னேன். இன்னும் அநேக முள. இவைகள் ஒவ்வொன்றையும் தனித்தனியே விளக்கிச் சொல்ல ஒரு உபந்நியாஸம் போதாது. ஆகையால் இதை இவ்வளவுடன் நிறுத்துகிறேன்.

மூன்று முக்கிய அம்சங்கள்.

ராமானுஜ மதத்தின் முக்கிய அம்சங்கள் என்ன? உலகிலுள்ள அநேக மதங்களைக் காட்டிலும் எந்த விஷயங்களில் இந்த மதம் வேறுபட்டு உலகத்தோருக்கு எதை முக்கியமாகக் கற்பிக்கிறது? அப்படிப்பட்ட சாசுவதமான உலகத்துக்கு உபயோகமான ஜீவ தாது போன்ற அம்சங்கள் இருந்தாலொழிய இம்மதம் பரவி நிலை நின்றிருக்கக் காரணமில்லையல்லவா? எல்லா மதங்களும் மோக்ஷத்தை யடையும் மார்க்கத்தையே போதிக்கின்றன. மோக்ஷமென்றால் விடுதலை; ஹிந்து மதப்படி கர்மத்தினாலுண்டாகும் சம்சாரபந்தத்தினின்றும் விடுதலை. இம் மோக்ஷத்திற்கு சாதாரணமாக மூன்றுபாயங்கள் கூறப்பட்டுள்ளன.

(1) கர்மயோகம்:— நிஷ்காம்யமாய் ஜீவனுக்கு ஏற்பட்ட சர்வ கர்மங்களையும் செய்தல். கீதையில் பகவான் அர்ஜுனனை நோக்கி:- "செய்யவேண்டிய கர்மத்தை எக்காலமும் ஸங்கமற்று (பற்றற்று) செய். கர்மத்தை ஸங்கமற்றுச் செய்யும் புருஷன் பரத்தைப் பெறுகின்றான்" என்று கூறியுள்ளதைக் கவனிக்க; பகவத்கீதை 3—19.

(2) ஞானயோகம்:—தகுந்த குருவினிடம் யோகவித்தை, அப்யஸிப்பவனும் மோக்ஷ அர்ஹனாகிறான்.

"காமக்குரோத பயங்களற்றவர்களாயும், என்னைத் தியானிப்பவர்களாயும், என்னை யுபாசித்துக்கொண்டு மிருக்கிற மஹான்கள் ஞானயோகத்தால் பரிசுத்தர்களாய் என் சொரூபத்தை யடைகிறார்கள்" என்று கீதையில் வெளிப்படையாய் பகவான் அருளிச்செய்திருக்கிறார்.

(3) பக்தியோகம் அல்லது உபாஸனை:- ஞானியானவன் தன் கர்மங்களைச் செய்தவனாய், யாவும் பகவத் ப்ரீதிக்காகச் செய்வதாக எண்ணிப் பகவானிலேயே மனதை ஊன்றிப் பகவானை யடைகிறான்.

"என்னிடமே மனதை வை, என்னிடம் புத்தியைப் பிரவேசிக்கச்செய். இதன்மேல் என்னிடமே வஸிப்பாய். ஸம்சயமில்லை" (பகவத்கீதை 12—8.)—என்று பகவான் பிரமாணம் செய்து கொடுத்திருப்பதைக் கவனிக்க.

சரணாகதியே வைணவத்தின் நிச்சய முடிவு.

ஆனால் இம் மூன்று மார்க்கங்களும் கஷ்டஸாத்தியம். மேன்மையான ஜீவன்களே அவைகளை ஸாதிக்க வல்லவர்கள். திருடசித்தமில்லாதவருக்கு இம் மூன்று யோகங்களையும் அப்ய ஸிக்க முடியாது. இத்தகைய தௌர்பல்ய மனதையுடைய பாமர ஜனங்களுக்கு ஒரு சுலபமான மார்க்கம் ராமானுஜர் தெரிவித்திருக்கிறார். இதுதான் பிரபத்தி என்றும், சரணாகதி என்றும், அடைக்கலம் என்றும் சொல்லப்படும் மார்க்கம். கடவுள் கருணாஸாகரர், தயாஸ்வரூபி. அவரிடம் நம்முடைய பாபக்கிரியைகளை வெளியிட்டு அவரை ஆச்ரயித்தால், அவர் நம்மைக் காப்பாற்றுவார். நம் கர்மங்கள் தீயினிற்றூசாய் பஸ்மீகரிக்கப்படும். இம்மார்க்கத்தை அப்யஸிக்க கல்வி, புத்தி முதலியவைகள் தேவையில்லை. ஜாதி பேதங்கள் கிடையா. எந்த ஜாதி, மதம் ஆனாலும், ஆணாயினும், பெண்ணாயினும் தானாகவோ, ஒரு குருவின் போதனையாலோ, இம்மார்க்கத்தில் மோக்ஷஸாம்ராஜ்யத்தை அடையலாம். இந்த விதமாக கடவுள் தயாசுவரூபி, நாம் ஒரு விதத்திலும் யோக்யதை யற்றவர்களா யினும் அவர் தயையால் நம்மைக் கடைத்தேற்றுவார் என்பதை பிரபத்தி சாஸ்திரமாக வற்புறுத்தினதே இராமானுஜரால் நமக் குண்டான பெரிய லாபம். இதுதான் வைஷ்ணவ மதத்தின் ப்ராமுக்யம். இம்மார்க்கத்தைப் பற்றினவனுக்குத் தன் ஜீவ னுடைய க்ஷேமத்தைப்பற்றின விசாரமே கிடையாது.

அப்பாரத்தை பரமாத்மாவே வஹிக்கிறார். நாம் அவரை மோக்ஷத்திற்கு யாசிக்க வேண்டியதில்லை. அவர் சேஷன், நாம் சேஷி; அவர் சொத்துக்காரர், நாம் அவர் சொத்து. சொத்தை சொத்துக்காரர் அவரிஷ்டம்போல் உப யோகிக்கலாம். இந்தவிதமாக வினியோகப்படுத்த வேண்டு மென்று கேட்டுக்கொள்ளவும் சொத்துக்கு அதிகார மில்லை. "இதை சரணாகதிகத்யம்" என்னும் நூலில் ராமானுஜர் நன்கு விளக்கி யுள்ளார். இந்தப் பிரபக்தி சாஸ்திரம் கீதை 18-ம் அத்தியாயத்தில் சர்மஸ்லோகத்தில் பொதிந்து இருக்கின்றது. "நீ எல்லா கர்மங்களையும் எனக்கு அர்ப்பணம் செய்து என்னை ஒருவனையே சரணமடைவாயாக. உன்னை எல்லா பாவங்களி னின்றும் விடுவிக்கிறேன். நீ துக்கிக்க வேண்டாம்" —

பகவத்கீதை 18—66.

வைணவ சம்பிரதாய விசேஷம்.

கடைசியாக, இந்த ஸ்ரீ வைஷ்ணவ மதத்தில் மற்றொரு விசேஷ முண்டு. இம் மதத்தையே ஸம்பிரதாய மென்பார்.

அதாவது, இம் மதத்தில் ஸ்ரீ அல்லது லக்ஷ்மிக்கு முக்கியத்தை கொடுக்கப்பட்டிருக்கிறது. லோகமாதாவின் ஸகாயமின்றி நாம் மோக்ஷமடைவது ஸாத்யமில்லை பரமாத்மா யாவருக்கும் பிதாவா யிருப்பினும் லக்ஷ்மி கடாக்ஷமின்றி மோக்ஷமடைதல் கூடாதகாரியம். நாம் பக்தி பூர்வகமாய் மோக்ஷமடைய பிரயத்தனப் படினும் நாம் கடவுள் கருணைக்குப் பாத்திரமாயினும் தயாநிதியான கடவுள் தான் செய்த சட்டத்துக்கு(Moral law) விரோதமாக நமக்கு மோக்ஷ மெங்ஙனம் தந்தருள்வார்?

நியாயம்; சுத்த நியாய சுவரூபமான கடவுள் ஜீவன் தான் செய்த கர்ம பலன்களைத் தான் அனுபவிப்பதைத் தவிர்ப்பாரா என்று ஸந்தேக முதிக்கும் நமக்கு ஒரு வழி காட்டியுள்ளார். அதாவது, லோகமாதா வழியாக நாம் அவரைச் சரணமடைந்தால் நம் அபவாதங்களையும், பாபங்களையும் அந்த ஸ்ரீ யானவள் மன்னித்து நம் சார்பாக சுத்த நியாய ஸ்வரூபியான கடவுளிடம் மன்றாடி நம்மை அவர் தயைக்குப் பாத்திரமாகச் செய்வார். எங்ஙனம் ஒரு குடும்பத்தில் தகப்பன் தன் மக்கள் செய்யும் குற்றங்களுக்குத் தகுந்தவாறு தண்டிக்கப் போகுங்கால் தாய் அம்மக்களுக்குப் பரிந்து கணவனிடம் மன்றாடி அவரை அக்குற்றங்களை மன்னிக்கச் செய்கிறாளோ அவ்வாறே லோகமாதா தன் மக்களாகிய ஜீவகோடிகளுக்காக ஜாதி, வருணம், மதம், புருஷன், ஸ்திரீ என்ற பேதங்களைப் பாராட்டாமல் லோகநாதனாகிய பரப்பிரஹ்மத்தினிடம் மன்றாடி மன்னிப்புக் கேட்டு அஜ் ஜீவன்களை உஜ்ஜீவிக்கச் செய்கிறாள்.

இவ் விதமாக ராமானுஜ மதத்தில், கடவுள் பிதா, லக்ஷ்மி லோகமாதா, ஸர்வ ஆன்ம கோடிகளும் இவ் விருவருடைய மக்கள், அக் காரணத்தினால் யாவரும் ஸகோதர ஸகோதரிகள் என்றும் முக்கியமான கொள்கைகள் அடிப்படையாக இருப்பதே இம்மதத்தின் விசேஷம்.

என்னுயிர்தந் தளித்தவரைச் சரணம் புக்கு
யானடைவே அவர் குருக்கள் நிரை வணங்கிப்
பின்னருளால் பெரும்பூதூர் வந்த வள்ளல்
பெரிய நம்பி ஆளவந்தார் மணக்கால் நம்பி
நன்னெறியை அவர்க்குரைத்த உய்யக் கொண்டார்
நாதமுனி சடகோபன் சேனை நாதன்
இன்னமுதத் திருமகளென் றிவரை முன்னிட்
டெம்பெருமான் திருவடிக ளடைகின்றேனே.

—வேதாந்ததேசிகர்.

பாரதி பிரஸ், மன்னார்குடி.

இறைவன் துணை.

கௌமார குருகுலக்
கல்விப் பிரசுரம் 1.

சமயமும் ஒழுக்கமும். 5.

கிறிஸ்து சமயம் அல்லது கிறிஸ்து மார்க்கம்.

ஆசிரியர்: —ரேவரண்ட் என். ஜி. பொன்னையா, பி, ஏ., எல். டி.,
உதவித்தலைவர், பின்ட்லே காலேஜ், மன்னார்குடி.

ஒரு மார்க்கத்தைப்பற்றி நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற கொஞ்சநேரத்தில் பேசி அதிலுள்ள சகல விஷயங்களையும் குறைவற எடுத்துக்காட்டுவது கூடிய காரியமல்ல: ஆகையால் சில முக்கியமான விஷயங்களை மட்டும் எடுத்துக்காட்டுவது, அதுவும் குறிப்பாக எடுத்துச்சொல்லுவது, மட்டுமே கூடியது. அப்படித் தெரிந்துகொள்ளும் முக்கிய விஷயங்களில் சில விஷயங்கள் விட்டுப்போவதும் கூடியதே. அவ் விஷயங்களைக் கேட்டுத் தெரிந்துகொள்வதே உசிதம்.

மேலும் இவ்விடத்தில் நாம் மார்க்க விஷயங்களை ஆராய்ச்சி செய்வது நம் நோக்கமல்ல. உலகப்பிரகாரமாக நம்முடைய அறிவை விருத்திசெய்யும் நோக்கமாய் கூடிவந்திருக்கிற சமயத்தில், பல மார்க்கங்களையும் பல மார்க்கத்தாரையும் பற்றித் தெரிந்துகொள்வது ஜன சமூகத்தில் நாம் நடந்துகொள்ளவேண்டிய முறையையும், மற்றவர்களோடு நாம் பழகும் விதத்தையும் விருத்திபண்ணுமென்பது உறுதி.

மேலே சொல்லியிருக்கிற வார்த்தைகளால் நான் சொல்லப்போகிற விஷயங்கள் அதிகச் சுருக்கமாகவே இருக்குமென்பது தெளிவறத் தெரியலாம்.

நிற்க. கிறிஸ்து மார்க்கத்தைப்பற்றிச் சில காரியங்களைக் குறிப்பாகச் சொல்லுவோம்.

1. கிறிஸ்துமார்க்கத்தை ஒரு கோட்பாடாக ஒரு சமயமாக நினைப்பது தப்பு. சமயமானது நாம் நம்பும் நம்பிக்கை நாம் விசுவாசிக்கிற விஷயங்கள். கிறிஸ்தவர்கள்சொல்லுகிறபடி விசுவாசப் பிரமாணம் நாம் விசுவாசிக்கவேண்டிய சத்தியங்கள் உண்டு. ஆனால் அவை ஜீவியத்தின் நடக்கைக்கு ஆதாரமாகக்கொண்டு வரப்பட்டு நம் ஜீவியத்தை மேன்பாடாக்கினாலொழிய நம் கொள்கை பிரயோஜனமற்றது. இது முக்கியமாய் கவனிக்க

வேண்டியது. பவுலப்போஸ்தலன் நான் பிழைப்பது கிறிஸ்து என்கிறார்.

2. இதற்கேற்க கிறிஸ்துமார்க்கம் இஜ்ஜீவியத்தை அசட்டை பண்ணுகிறதில்லை. மானிட தேகம், ஆவி, ஆத்துமா யாவும் கனமாக மதிக்கப்படுகிறது. இந்த ஜீவியம் வரப்போகிற ஜீவியத்திற்கு ஆயத்தமாகவும், ஜீவியத்தின் நடக்கை வரப்போகிற ஜீவியத்திற்கு இன்றியமையாததாகவும் மதிக்கப்படுகிறது.

கடவுள் மனிதனை மகிமையினாலும் கனத்தினாலும் முடி சூட்டியிருக்கிறதாக சங்கீத புஸ்தகத்தில் சொல்லப்படுகிறது. இயேசுகிறிஸ்து தாமும் 'ஒரு மனிதன் உலக முழுவதையும் சம்பாதித்தாலும் தன் ஆத்துமாவை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபமென்ன? என்றும்; உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது. உங்கள் பரமபிதாவின் சித்தமில்லாமல் அவைகளிலொன்றும் கீழே விழுவதில்லை யென்றும் சொல்லியிருக்கிறார். ஆகக் கடவுளின் பார்வையில் மனுஷன் விசேஷித்தவன். அவர் ஒவ்வொருவர் பேரிலும் கரிசனை யுள்ளவரா யிருக்கிறார்.

3. கிறிஸ்துமார்க்கம் அன்பின் மார்க்கம் கடவுள் அன்பு. அவர் மனுஷர்பேரில் அன்பு கூறுகிறார். அவ்வன்பு கிறிஸ்துவின் மனுஷாவதாரத்தின் மூலமாய் விசேஷித்து விளங்குகிறது. மனுஷன் கடவுள்பேரில் அன்புகூர்ந்து, அவ்வன்பின் காரணமாக மற்ற மனிதர் யாவர்மேலும் அன்புகூரக் கடமைப்பட்டிருக்கிறான். ஒரு அப்போஸ்தலன் சொல்லுகிறபடி அன்பு நியாயப் பிரமாணத்தின் நிறைவேறுதல். இவ்வுலகம் புதிதாகவும் கடவுளின் ராட்சியம் இப்பூவுலகத்தில் வியாபிக்கவும் வேண்டுமாகில், அது அன்பினாலே மாத்திரம் கூடும். மனுஷருடைய சகல கஷ்டங்களும் சகலவித உபத்திரவங்களும் நீங்க வழிவகை அதே. கடவுள் அன்பின் மயம். மனுஷன் தன் அன்பினாலே மறுரூபப்படுகிறான், தெய்வீக ஜீவன் அடைகிறான்.

4. கிறிஸ்துமார்க்கம் பாவத்தைக் கண்டிக்கிறது. இவ்வுலகத்தின் கஷ்டத்திற்கும் சகல மனிதரின் கஷ்டத்திற்கும் காரணம் பாவமே. பாவம் மனிதனைக் கடவுளிடமிருந்து பிரித்துவிடுகிறது. மனிதரையும் ஒருவரிடமிருந்து ஒருவரைப் பிரித்துவிடுகிறது.

பாவமன்னிப்பு மனிதருக்கு முக்கிய அவசியம். பாவமில்லாத ஜிவியமே கடவுளுக்கேற்ற ஜீவியம். இதுவே மனித

னடையக்கூடிய மேலான நிலைமை. இது மனிதனுடைய சொந்தப் பிரயத்தனத்தால் அடையக்கூடியதல்ல. கடவுளோடு ஐக்கியப்பட்டு அவருடைய பலத்தைப் பெற்று அவருடைய ஒத்தாசையினுல் மட்டும் இவ்வித ஜீவியத்தை அடையலாம்.

இந்த ரட்சிப்பு இயேசுகிறிஸ்துவினுல் மட்டும் கிடைக்கிறது. அவர் கடவுளிடத்தில் நடத்தும்வழி. அவர்தான் கிறிஸ்து மார்க்கம். கிறிஸ்து இல்லாமல் கிறிஸ்து மார்க்கம் இல்லை.

5. இயேசுகிறிஸ்து கடவுளாகவும் மனிதனுகவும் இருக்கிருர். சுமார் 2000 வருஷங்களுக்கு முன்னே அவர் பலஸ்தீனு தேசத்தில் யூதகுலத்தில் ஓர் ஏழைக்குடும்பத்தில் பிறந்து; ஏழையாக வளர்ந்து, ஏழையாக ஜீவித்து மூன்றரை வருஷகாலமாக மனிதருக்குக் கடவுளைக் குறித்துப்போதித்து, தம்முடைய போதகத்தாலும் நடக்கை ஜீவியத்தாலும் கடவுளை வெளிப்படுத்திக் கடைசியாக யூதர்களால் அவமதிக்கப்பட்டு நிந்தைக்குள்ளாகி, ரோம துரைத்தனத்தாரால் குற்றவாளியெனத் தீர்க்கப்பட்டு, பலவித பாடுகள்பட்டு, சிலுவையில் அறையப்பட்டு, மரித்து, அடக்கம் பண்ணப்பட்டார். மூன்றும் நாள் உயிரோடெழுந்து தம்முடைய சீஷர்களுக்குக் காட்சியளித்து தம்முடைய ஊழியத்தை தம் சீஷரிடத்தில் ஒப்புவித்து 'இதோ உலகத்தின் கடைசி பரியந்தம் உங்களோடிருக்கிறேன்' என அருள்செய்து பரலோகஞ் சென்றுர்.

அவருடைய சீஷர்கள் அவருடைய கட்டளைப் பிரகாரம் சகல ஜனங்களுக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, சபைகளை நாட்டி கடவுளுடைய ராட்சியத்தை பரம்பச் செய்தார்கள். இச்சபைக்கு அஸ்திபாரம் கிறிஸ்துவே. இதற்கு ஆதாரமும் இதற்குப் பெலமும் அவரே. இதற்கு ஜீவனும் நடக்கைக்கு மாதிரியும் அவரே. உயிரோடிருக்கிற கிறிஸ்துவே கிறிஸ்தவ சபைக்கும் கிறிஸ்தவனுக்கும் ஜீவனையும் பெலனையும் அருளுகிறவர்.

இன்னும் இரண்டொரு விஷயங்களைக் கூறி முடிக்கிறேன்.

i. இயேசுகிறிஸ்து கடவுளை வெளிப்படுத்துகிறவர். கிறிஸ்து மார்க்கத்தின்படி கடவுள் எப்படிப்பட்டவர் என்ற கேள்விக்கு இயேசுகிறிஸ்து நாதர் அருளிய போதனை யாதெனில் கடவுள் சகலத்தையும் சிருஷ்டித்தவர், சகலத்தையும் பாதுகாக்கிறவர்.

அவருடைய உத்தரவின்றி யாதொன்றும் நடக்கிறதில்லை. அவரே காரண காரியகர்த்தா.

கடவுள் அன்பு. மானிடர்பேரில் கவலையுள்ளவர். கரிசனையுள்ளவர். மானிடர் கடைத்தேறும் வழியை உண்டாக்கினவர். யாவரும் தம்மை அறிந்து தமக்கேற்ற ஜீவியம் செய்யவேண்டுமென்பதே அவருடைய நோக்கம். யாரும் கெட்டுப்போகிறது அவருடைய சித்தமல்ல.

கடவுள் மனிதருடைய கஷ்டங்களுக்குக் காரணரல்ல. பாவமே காரணம். அவர் மனிதர்மேல் இரக்கமும் உருக்கமுமுள்ளவர். அவருடைய கண்கள் தனித்தனியே ஒவ்வொரு மனிதன் பேரிலும் இருக்கின்றன.

கடவுள் நம்முடைய பரமபிதா. தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறதுபோல் கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார். இன்னும் சொல்லப்போனால் விரியும். இதுவே இயேசுகிறிஸ்து தம்முடைய போதனையினாலும் மேலாக தம்முடைய ஜீவியத்தினாலும் போதித்தது. கிறிஸ்தவன் இயேசுகிறிஸ்துவின் ஜீவியத்தினாலேயே கடவுளைத் தெரிந்துகொள்ளுகிறான்.

ii இயேசு கிறிஸ்து—தம்மோடுண்டாகும் ஐக்கியத்தால் மனிதருக்குத் தீமையை மேற்கொள்ளவும் நன்மையைக் கையாளவும் வல்லமையையும் சத்துவத்தையும் அருளுகிறார். அவரோடு ஐக்கியப்பட்டவன் கடவுளோடு ஐக்கியப்படுகிறான். மற்ற மனுஷரோடும் ஐக்கியப்படுகிறான். ஆக இஜ்ஜீவியத்திற்கு அவசியமானது இதுவே. கடவுளோடும் மனிதரோடும் ஐக்கியம். அன்பு, சந்தோஷம், சமாதானம், பொறுமை, இவை முதலான நற்குணங்களால் அலங்கரிக்கப்பட்டு கடவுளோடும் மற்று மனிதரோடும் ஐக்கியப்பட்டு ஜீவிக்கிறவன் நித்திய ஜீவனை அடைந்து கடவுள் சமுகத்தில் சதாகாலமும் வீற்றிருக்கிறான்.

கடைசியாக நான் சொல்ல நினைத்ததெல்லாம் சொல்ல முடியாது. இதில் கிறிஸ்தவசத்தியங்கள் யாவும் சொல்லிவிட்டதாக அபிப்பிராயமல்ல. ஒருவகையாய் இது கிறிஸ்துமார்க்கத்தின் சாராம்சம் இதற்குமேல் கேட்கிற கேள்விகளுக்கு கூடுமான வரைக்கும் விடையளிக்கத் தயாராயிருக்கிறேன்.

[பாரதி பிரஸ், மன்னார்குடி.]

இறைவன் துணை.

கௌமார குருகுலக் கல்விப் பிரசுரம் 1.

சமயமும் ஒழுக்கமும் 6.

இஸ்லாத்தின் தத்துவம்.

ஆசிரியர்—ஜனுப், பாவலர் சி. மீ. முகஹமது யூசுப் சாஹிப்.
ஷம்ஸுல் ஹுதா பத்திராதிபர், மன்னார்குடி.

———o———

பீடிகை.

உலக மன்பதைகளின் இகபர நற்பயனுக்குப் பற்பல மார்க்கங்கள் இறைவனால் அருளப்பெற்றனவேபோல் இஸ்லாம் மார்க்கமும் அருளப்பெற்றிருக்கின்றது. "இஸ்லாம்" என்பது இறைவனுடைய கட்டளைக்கு முற்றிலும் கட்டுப்படுதல் என்றும் சாந்திக்குள் பிரவேசித்தல் என்றும் பொருள் பெறும். இந்த இஸ்லாம் மார்க்கத்தைக் குறித்து இறைவன் திருமறையாகிய குர்ஆனில் கூறுவதாவது :—"இன்று உங்களுக்காக உங்களுடைய மார்க்கத்தைப் பூர்த்தி செய்துவிட்டேன்; உங்களின்மீது எனது கிருபையை இன்று சம்பூரண மாக்கிவிட்டேன்; உங்களுக்காக இஸ்லாத்தை ஓர் ஸன்மார்க்கமாகத் தேர்ந்தெடுத்திருக்கின்றேன்" (5,3). "நிச்சயமாக ரக்ஷகனிடத்தில் உண்மையான மார்க்கமாயிருப்பது இஸ்லாம்தான்" (3,18) என்பதே யாகும். இவ்வாறு இறைவன் போற்றியுள்ள இஸ்லாமானது சொல்லளவிலும் எழுத்தளவிலும் உண்மையுள்ள மார்க்கமா யிருப்பதுடனில்லாமல் அம்மார்க்கத்தின் அமைப்பிலும், அதைக் கடைப் பிடிப்பதால் மனிதர்களுக்கு உண்டாகும் நற்பயன்களைக் கொடுப்பதிலும் உண்மையுள்ளதாகவே யிருந்து வருகின்றது. அன்றியும் இறைவன் கூறுவதேபோல் சம்பூரணம் வாய்ந்ததாய்த் தன்னுக்குள் யாதொரு திருத்தமும் வேண்டியில்லாததாய், அகிலத்திலுள்ள அயல் மத வாதிகளால் எடுத்தாளப் பெற்றும் பரவி வருகின்றது. இம் மார்க்கம் உதயமானது நபிகள் நாயகம் அவர்களுக்கு முன்னே அவதரித்துள்ள தீர்க்கதரிசிகளின் ஆரம்பக் காலத்திலா யிருக்கும். எனினும், மனிதர்கள் தங்களின் அறியாமையால் அடிக்கடி வேத நியதிகளைப் புரட்டிக்கொண்டும், அஞ்ஞானத்துள் ஆழ்ந்து, தங்களிஷ்டம்போல் வெறியாடி அதிக்கிரமங்களைச் செய்துகொண்டும் வந்ததால் இறுதியில் அனைவர்க்கும் அவசியமான சீர்திருத்தங்களுடன் ஒரு வேதம் பரிபூரணத்துடன் வேண்டியிருந்தது. அந்த வேதந்தான் திருமக்கமாநகரில் அவதரித்த முஹம்மது நபி (ஸல்) அவர்களுக்கு இறைவனால் விண்ணவர் மூலமாய் அருளப்பெற்ற திருக் குர்ஆனுகிய திவ்விய கிரந்தமாகும். அந்த வேதம் ஒரு குறிப்பிட்ட தேசத்தார்களுக்கோ அன்றி வகுப்பார்களுக்கோ மட்டும் அருளப் பெற்றதாயில்லாமல், அகிலத்திலுள்ள அனைவர்களுக்காகவும் அருளப் பெற்றதா யிருப்பதிலிருந்தே அதன் ஒப்பற்ற விசால நோக்கம் நனி சிறந்து விளங்கக் கிடக்கின்றது. "ஏ மனிதர்காள்! நிச்சயமாக

உங்க ளனைவர்க்கும் நான் இறைவனின் தூதனு யிருக்கின்றேன் என்று கூறுவீராக'' (7,158) "மேலும் எல்லா மனிதர்களுக்கும் நற்செய்தி கூறுகிறவராகவும், அச்சமூட்டி எச்சரிக்கை செய்கிறவ ராகவு மல்லாமல் நாம் உம்மை அனுப்பவில்லை'' (34,28) எனக் கருணாநிதியாகிய இறைவன் முஹம்மது நபி (ஸல்) அவர்களுக்குக் கூறுவதிலிருந்து இஸ்லாம் மார்க்கம் எல்லா ஜாதியார்க்கும் நன் னெறி காட்டக் கூடியதாய் வந்திருக்கின்றதென்றும், நபிகள் நாயக மவர்கள் சகல மனித கோடிகளுக்கும் ஒரு தயாள மூர்த்தியாகவும் அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவராகவும் அனுப்பப்பெற்றுள்ளார்க ளென்றும் செவ்விதின் விளங்கிக் கொள்கின்றோம்.

அவ்வாறு உலக மக்கள் அனைவர்க்கும் அவரவர் தத்தம் வாழ்க்கையை ஒழுங்குபடுத்தி நடந்துகொள்ளும் வண்ணம் செந் நெறிகளைத் தன்னகத்தே பெற்றுவந்திருக்கின்ற இஸ்லாத்தின் கொள்கைகளில், சுய நலங்கொண்டு ஒரு வகுப்பார் மற்றொரு வகுப் பாரைத் தாழ்த்தி வைக்கும்படியான சட்டதிட்டங்களோ, மாந்தர் கள் எளிதில் எடுத்தனுஷ்டிக்க முடியாத கட்டளைகளோ, ஒருகாலத் திற்கோ ஒரு இடத்திற்கோ ஒருபோது பொருத்த முடையதா யிருந்து, பிறகு பொருத்தமற்றதாகித் திருத்தி யமைக்க வேண்டிய போதனைகளோ ஒரு சிறிது மில்லை யென்பது குறிப்பிடத் தக்க தாகும். தீமைகளை விலக்குதற்கு வேண்டிய எல்லாவிதமான உபா யங்களும், ஸன்மார்க்க நடத்தைக்கும் ஆன்ம ஞான முன்னேற்றத் திற்கும் அவசியமாய் வேண்டிய சகலவித உபாயங்களும் இஸ்லாத் தில் நனி சிறந்து காணப்படுகின்றபடியால், இஸ்லா மொன்றே மனி தர்களுடைய எவ்விதத் தேவைகளுக்கும் திருப்தியான வழிகாட் டியா யிருக்கின்றதென்றும், திருக் குர்ஆனே இறுதி வேத மென் றுங் கூறப் பெறுகின்றன.

மூலக் கொள்கையும் முக்கியக் கடமையும்.

"நிச்சயமாக மனிதனை நாம் மேலானவனாக சிருஷ்டித்தோம்; எனினும் அவனை அவனுடைய தீச்செயலால் கீழானவற்றிற்கெல் லாம் கீழானவனாக மாற்றினோம்'' (95,45) எனத் திருக் குர்ஆனில் இறைவன் கூறுகின்றான். எனவே மனித சிருஷ்டியில் உதித்தவன் தனக்கு வெளியாக்கப் பெற்றிருக்கின்ற நேரான ஸன்மார்க்கத்தைச் சீராகக் கடைப் பிடிப்பானாயின் அமரர்களும் தனக்குக் கீழ்ப்படியும் படியான அவ்வளவு மகோன்னத உச்சஸ்தானத்தை அடையலாம். அப்படியன்றித் தன்னையுந் தனது தரத்தையுங் கவனியாதவனாய் மனம்போனபடி இச்சை வயப்பட்டு நடப்பானாயின், கேவலம் மிரு கத்தினுங் கீழான இழிய தன்மையில் வீழ்ந்து உழல்வா னென்பதி லென்ன சந்தேக மிருக்கின்றது?

இவ்வுலகின்கண் காணப்படாநின்ற சகல ஜீவவர்க்கங்களைப் போன்றே நமது இயற்கைத் தன்மையும் ஸ்தூலத்திற்கு வேண்டிய

வற்றை ஏற்றுக்கொண்டும், வேண்டாதவற்றை விலக்கிக்கொண்டு மிருக்கின்றது. ஸ்தூலதேகத்திற்கு அமைந்திருக்கின்ற இத்தன்மை யானது சூக்ஷ்ம தேகத்திற்குத்தானே அமைந்தில்லை. உதாஹரண மாக :—ஸ்தூல சரீரத்தினுள் ஏற்படுகின்ற அசுத்தங்கள் சுவாச மாகவும், வியர்வையாகவும், வாந்தியாகவும், மலஜலமாகவும் வெளி யிற் றள்ளப்படுகின்றன. இஃது இயற்கையாகவே நடைபெறுவ தாகும். இஃதேபோல் சூக்ஷ்ம தேகமாகிய ஆத்மாவிற்கு வேண் டிய ஸன்மார்க்கத்தைத் தானே ஏற்றுக்கொண்டு, வேண்டாத துன் மார்க்கத்தை வெறுத்துத் திரஸ்கரிக்குஞ் சக்தியானது மனத்திற் குச் சுபாவத்திலேயே அமைந்தில்லை. இதனாற்றான், "மனம்போன போக்கெல்லாம் போகவேண்டாம்" என்ற நீதி வாக்கியமும் உண் டாயது. ஆகவே மனத்திற்கு வேண்டியவைமீது விருப்பையும் வேண்டாதவை மீது வெறுப்பையும் உண்டாக்க வேண்டுமானால் அது பழக்கத்தினாலேயே சாத்தியமாகும். அத்தகைய உயரிய பழக்க வழக்கங்களை உண்டு பண்ணுவதற்குச் சாதனமான சட்ட திட்டங்க ளடங்கிய வேதத்தை மனக்குரங்கின் வயப்பட்டுக் கிடக் கின்ற ஒரு மனிதன் தானே இயற்றிவிடுத லென்பது முடியாத காரி யமே யாகும். ஆதலின், அந்த வேதம் யாவரையுஞ் சிருஷ்டித்துப் பரிபாலிக்கின்ற ஏக ரக்ஷகனாலேயே அருளப்பெற்றிருக்கின்றதென் பதும், அதைக் கடைப் பிடித்து நடப்பதே உலகமன்பதைகளின் கடமை யென்பதும் இஸ்லாத்தின் கொள்கையாகும்.

குர்ஆன் திருமறையானது மானிட உற்பத்தியைப்பற்றி இவ் வாறு கூறுகின்றது :—முதன் முதலில் மண்ணின் சாரமாயிருந்து பின்னர் உயிர்க்கிருமியாகவும், அதன்பின் கர்ப்பாசயத்தில் கட்டி யாகவும், பின்பு சதையாகவும், பிறகு அதனுள் தசை யெலும்புக ளாகவும், அதற்கும் பிறகு அவ் வெலும்புகள் தசை நாரால் மூடப் பட்டுப் பிண்டமாகவும், இறுதியில் ஏழாவது நிலைமையில் வேறொரு உருவாகவும் அமைகின்றது. (23,12-14) இந்த ஏழாவதான புதிய சிருஷ்டிதான் மனித உணர்ச்சியாக இருக்கின்றது. இதுதான் இதற்குமேல் விருத்தியாகக் கூடிய எல்லாவற்றிற்கும் அஸ்திபாரமா யிருப்பது. மனிதனுடைய ஜீவ உணர்ச்சியில் அவனது ஆத்மா வானது தன்னுடைய ஆரம்ப ஸ்திதியில் மறைந்து கிடக்கின்றது. இவ்வாறு ஒளிந்து கிடக்கின்ற ஆத்மாவானது பிண்டத்தின் ஏழா வது நிலைமையில் மலரத் தொடங்குகின்றது. அதன்பின் அந்த ஆத்மாவின் அபிவிருத்தியானது தேகத்துடன் வளர்ந்தோங்கி வரு கின்றது.

இஸ்லாத்தின் போதனைப்படி ஆத்மாவின் படித்தரமானது ஏழுவகையான நுட்பப் பாகு பாடுகளாகப் பிரிக்கப்படுகின்றது. (1) தீமையைச் செய்யத் தூண்டுதல் செய்கின்ற ஆத்மாவிற்கு "அம்மாரா" என்றும், (2) தன்னிடத்தே குற்றங்காணும் ஆத்மா விற்கு "லவ்வாமா" என்றும், (3) சுயமே உணர்ந்துகொள்ளும்

ஆத்மாவிற்கு "முல்ஹிமா" என்றும், (4) சாந்தி நிலையை அடைந்திருக்கின்ற ஆத்மாவிற்கு "முத்ம இன்ஞ" என்றும், (5) ரக்ஷகனால் திருப்தியடையும் ஆத்மாவிற்கு "ராஸிய்யா" என்றும், (6) ரக்ஷகனுக்குத் திருப்தி செய்கின்ற ஆத்மாவிற்கு "மர்ஸிய்யா" என்றும், (7) பரிபூரணமான ஆத்மாவிற்கு "காமிலா" என்றும் பெயர். எனவே இஸ்லாமானது தீங்கு செய்யத் தூண்டுவதா யிருக்கின்ற நிலையிலிருந்து ஆத்மாவைப் பரிபூரண நிலைமைக்குக் கொண்டு போய்ச் சேர்க்கின்றது. அந்த ஆரம்ப நிலையிலுள்ள ஆத்மா "எல்லாம் என்னுடையதே" என்ற மிருக சுபாவத்தில் நிற்கின்றது. இரண்டாவது நிலைமை "உன்னுடையது உனக்கு, என்னுடையது எனக்கு" என்பதாகும். மூன்றுவது சாந்தி நிலையோ "எல்லாம் உன்னுடையதே" என்றுணர்வதாகும். "என்னுடையது" அன்றி "உன்னுடையது" என்று பிரித்துணரும் வேற்றுமையற்றுப் பரிபூரணமாய் நிற்கும் நிலைமையே மனித கோடிகளின் மகோன்னத நிலையாகும். அத்தகைய உச்சஸ்தானத்திற்கு மனிதர்கள் உயர்ந்து வரும் வண்ணம் போதிக்கவே தீர்க்க தரிசிகளை எல்லா ஜாதியாரிடத்தும் அனுப்பி யிருப்பதாக ரக்ஷகன் கீழ்க்காணுமாறு அருளுகின்ருன் :—"அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவர் அவதரிக்காத ஜாதியார் ஒருவருமில்லை" (35,24). "நீர் மனிதர்களை அவர்களுடைய ரக்ஷகனின் அனுமதியைக்கொண்டு காரிருளினின்றும் பேரொளியின் பக்கம்-கண்ணியமிக்கவனும் புகழுக்குரியவனுமாகிய (இறைவ) னின் நன்னெறியின் பக்கம் கொண்டுவரும் பொருட்டு நாம் உமக்கு வெளியாக்கித் தந்த வேதம் (இதுவாகும்.)" (14,1) என இறைவன் கூறுவதினின்று தீர்க்க தரிசிகளின் அந்தஸ்தும் வேதங்களின் நற்பயனும் இனிது விளங்குகின்றன.

இவ்வாறுள்ள மூலக்கொள்கைகளை உறுதி கொள்வது இஸ்லாத்தின் முதன் முதலான கடமையாகும். அந்த உறுதிப்பாட்டை ஆறு அம்ஸங்களாகப் பிரித்து ஒப்புக்கொள்ளல் வேண்டும். அவையாவன .—(1) ரக்ஷகன் ஒருவன் உண்டு. (2) அமரர்கள் உண்டு. (3) வேதங்கள் உண்டு. (4) தீர்க்க தரிசிகள் உண்டு. (5) இறுதித் தீர்ப்பு நாள் உண்டு. (6) நன்மை தீமைகளின் பாகுபாடுகள் இறைவனைக்கொண்டே பூர்த்தியாகின்றன என்று ஒப்புக்கொள்ளலே யாகும். இந்த ஆறு அம்ஸங்களும் இஸ்லாத்தின் ஆணி வேர்களே போன்றிருக்கின்றன' இவ்வாறு ஒப்புக் கொள்கின்ற எந்தப் பகுத்தறிவுள்ள மனிதனும் தன்னிஷ்டத்திற்கு மனம்போன படி நடக்கமாட்டா னென்றும், அப்படி நடக்க மனச்சாக்ஷி இடங்கொடா தென்றும் புலனுகின்றதே யன்ருே?

மனிதன் பாபச் சேற்றிலும் கருமக் கடலிலும் சிக்கிக்கொண்டு உழல்வதாகச் சுத்த சத்திய இஸ்லாமானது போதிக்கவில்லை. அன்றியும், மனிதர்களின் பாவந்தொலைய எந்தத் தீர்க்க தரிசியாவது இரத்தஞ் சிந்தவேண்டியதென்றும் இஸ்லாம் கட்டளை யிடவில்லை.

ஆனால், என்ன கூறுகின்றதென்றால் :—"ஒருவர் சுமையை மற்றவர் மாற்றிக்கொள்ளுதல் முடியாது" (2,48) என்றும், "அவிசுவாசிகள் நன்னம்பிக்கை கொள்ளாதவர்களாயிருப்பதனால் உம்முடைய ஆத்மாவை நீர் (துயரத்தினால்) மாய்த்துக் கொள்வீரோ?" (26,3) என்றுந்தான் கூறுகின்றது. மேலும், ஒருவன் தான் முயற்சித்த அளவுக்கே நற்கூலியைப் பெற்றுக்கொள்வானென்பது இஸ்லாத்தின் எழில் பெறு உபதேசமாகும். ஆதலின் மனிதருடைய அறிவையும் ஆக்கையையும் போஷிப்பதற்குச் சில அப்பியாசங்கள் இருப்பதேபோல் ஆத்ம விருத்திக்குத் தக்க அப்பியாசங்கள் இருக்கின்றன. அவைகளை ஒவ்வொரு மனிதனும் அப்பியசித்து ஆத்ம ஸாந்தியடைதல் வேண்டும். இத்தகைய பாடங்களைத்தாம் இஸ்லாம் மார்க்கம் வெவ்வேறு படித்தரங்களாய்ப் போதிக்கின்றது. மனிதர்களுக்கு உட்பகையாய்த் தோன்றுகின்ற காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாச்சரியம் முதலான தீய குணங்களை விலக்கி, அருள், அன்பு, ஈவு, இரக்கம், பொறுமை, சாந்தம், சகிப்புத்தன்மை முதலான சற்குணங்களை யுண்டுபண்ணத் தக்கதாகவும், ஆத்ம அபிவிருத்திக்கும் சமூக முன்னேற்றத்திற்கும் நற்பயனளிக்கக் கூடியதாகவுமுள்ள ஐந்து கடமைகளை இஸ்லாமானது ஏற்படுத்தி யிருக்கின்றது. இவைதாம் இஸ்லாத்தின் ஐந்து தூண்களெனக் கூறப் பெறுகின்றன. அவையாவன :—

(1) இவ்வண்டகோளத்தில் ஒரே தெய்வத்தைத் தவிர வேறு எதுவும் தெய்வமாகாதென்றும், முஹம்மது நபி (ஸல்) அவர்கள் அவ்விறைவனின் திருத் தூதரென்றும் மனவுறுதிகொண்டு கூறுதல். (2) தினம் ஐம்முறை தொழுதல். (3) வருஷத்தில் ஒரு மாதத்திற்கு நோன்பு நோற்றல். (4) வருஷத்தில் எச்செலவும் போக ஐம்பது ரூபாய்ச் சில்லறை மிச்சப்பட்டால் அதில் ஒன்றேகால் ரூபாய்ச் சில்லறை (கிட்டத் தட்ட நூற்றுக்கு இரண்டரை) யை ஏழை வரி கொடுத்தல். (5) திருமக்கமா நகர்க்கு ஆயுளில் ஒரு முறை யாத்திரை செல்லல் என்பவைகளே யாகும். இவ் வைந்து முக்கியக் கடமைகளால் மாந்தர்க்கு உண்டாகும் நனிதகை நற்பயனைக் கவனிப்பாம் :—

யாவையும் சிருஷ்டித்துக் காத்து அழிக்கக் கூடிய இறைவன் ஒருவன் உண்டென்றும் வேறு யாதும் கடவுளாகமாட்டாதென்றும் உறுதி கொள்வதால் மூட நம்பிக்கையையும் ஜாதிப் பிரிவுகளையும் உண்டுபண்ணுகின்ற விக்ரக வணக்கத்தைக் கட்டோடே ஒழிப்பதாகின்றது. இறைவனது சிருஷ்டிப் பொருள்களில் எதையும் கடவுளுடைய ஸ்தானத்தில் வைத்தெண்ணத் தகாதென்பதே இஸ்லாத்தின் கண்டிப்பான கொள்கையாகும். ஏனெனின், மனிதனைத் தனது "பிரதிநிதி" யாகவும், சகல சிருஷ்டிகளினும் சிரேஷ்டனாகவுஞ் சிருஷ்டித் திருப்பதாய் ரக்ஷகன்றானே கூறுகின்றான். மனிதனின் உயர்வு அங்ஙனமிருக்க, இறைவனின் பிரதிநிதியாய்

வந்துள்ள பகுத்தறியுள்ள மனிதன் தன்னிலுந் தாழ்ந்தவற்றுக்குத் தனது சிரசைத் தாழ்த்தி வணக்கம் புரிவது ஒரு புறத்தில் தகுதியற்றதா யிருப்பதுடன் மறுபுறத்தில் மனிதனின் பகுத்தறிவிற்கு இழுக்கை யுண்டுபண்ணுவதாயு மிருக்கின்றது. இதனால் ஏக தெய்வ வணக்கத்திற்குப் பங்க முண்டாகின்ற தென்பதே இஸ்லாத்தின் நோக்கமாகும்.

அவ்வாறு ஒப்புக்கொண்டவர்கள் அவ்வொப்பரும் தனி முதற்றலைவனைத் தினந் தினமும் ஐந்து முறை அரசன், ஆண்டி, கற்றோர் மற்றோர் என்ற வேறுபாடின்றி வரிசையாய் நின்று வணங்கக் கடமைப்பட் டிருக்கின்றார்கள். அங்ஙனம் வணங்குங்கால் புலன்களைச் சிதைய விடாமல் யாவரும் ஒரு திசை நோக்கி வேறு சிந்தனையற்றுத் திரிகரண சுத்தியாய் இருப்பதால் புல னடக்கமும் ஆத்ம அபிவிருத்தியோடு கூடிய சாந்தியு முண்டாகின்றது. மேலும், சமத்துவ உணர்ச்சியும் சமூக ஒற்றுமையும் விரவுகின்றது. ரக்ஷகனிடத்து மக்கள் யாவருஞ் சமமே யென்ற நியதி புலனுவதுடன் மனிதன் தன்னையே முற்றும் இறைவனுக்கு அர்ப்பணஞ் செய்ய வேண்டியவனு யிருக்கின்றா னென்பதும் இனிது விளங்குகின்றது. அன்றியும், ஒவ்வொரு நாளும் ஐம்முறை அர்த்த ஸ்நானஞ் செய்வதாலும் நின்று, குனிந்து, இருந்து, வணங்கித் தொழுவதாலும் சரீர சுத்தமும் தேக திடனும் விருத்தியாகி ஆத்ம பலத்திற்குத் துணை புரிகின்றதாக ஆகின்றது. ஆகவே இத்தொழுகையானது தோட்டி முதல் தொண்டமான் வரையுள்ள யாவருங் கூடிய தொரு சமூக யோகாப்பியாசமாகவே தினந்தினம் தலை சிறந்த நலன்களை இனிது பயக்கின்றது.

வருஷத்திற் கொருமுறை "ரமலான்" என்ற மாத முழுவதும் பகற்போதில் உண்ணு விரத மிருப்பதால் ஒரு வகையில் உணவு இச்சையும் போக இச்சையுந் தணிந்து சமப் படுவதுடன் ஐம்புலக் குதூகலம் அடங்கி ஆத்ம சாந்தி யேற்படுகின்றது. ("அன்னம் ஒடுங்கினுல் ஐந்தும் ஒடுங்கும்" என்ற முது மொழி ஈண்டு இனிது நோக்கற்பாலதாகும்.) மறுவகையில் உடலொட்டிய நோய்கள் நீங்கிச் சரீர சுகம் உண்டாகின்றது. ("லங்கனம் பரம ஔஷதம்" என்பதொரு பழமொழி) அன்றியும் தனவான் ஏழை என்ற வேறு பாடும், தனவான்கள் ஏழைகளின் பசியுணராத் தன்மையும் நீங்கி விடுகின்றது.

நூற்றுக்கு இரண்டரை வீதம் ஏழை விகிதங் கொடுப்பதால் "தான் தேடினது தனக்கே" என்று இறுமாந்திருக்கின்ற ஆணவம் விலகுவதுடன் அதில் ஏழைகளுக்கும் உரிமை ஏற்படுகின்றது. இதனுல் ஒருவர்க் கொருவர் நீங்காத சகோதரத்துவம் தானே உண்டாகின்றது. கூன், குருடு, நொண்டி, முடம், செவிடு, ஊமை முதலான அங்க ஹீனர்களுக்கும் பேருதவி புரிகின்ற தாகின்றது.

இறுதிக் கடமையாகிய திரு மக்கமா நகர்க்கு யாத்திரை சென்று அங்கே எத்தேசத்தார்களா யிருந்தாலும் ஒரே வெள்ளை யுடையைத் தையலில்லாமல் உடுத்திக்கொண்டு இறைவனிடம் பிரார்த்தனை புரிதல் உலக ஜனங்களின் ஒற்றுமையையும் உண்மையான சமத்துவத்தையும் வளர்க்கின்றது. அன்றியும் ஒருவர்க் கொருவர் நிலைமை யுணர்ந்துகொள்ளவும் உதவி புரியவும் வசதி ஏற்படுகின்றது. மேலும், யாவரும் தமது இல்லந்துறந்து இறைவனது வழியிற் திரும்பிவிட மனவோர்மை கொண்டுள்ளார்க ளென்பதையும் எண்பிக்கின்றது. இவையன்றி, உலக வியவகாரங்களும் தேச அமைப்பும் உணர்ந்துகொள்ள ஹேதுவுண்டாகின்றது. அந்தச் சமயத்தில் யாவரும் "நான்" "எனது" எனக் கொண்டுள்ள பொய்ம் மயக்கந் தீர்ந்து "யாவும் உன்னுடையதே" என்ற தியாக புத்தியுடன் விளங்குகின்றார்கள். இவையன்றி :—

மேற்கூறப் பெற்றுள்ள முக்கியக் கடமைகள் நித்திய அனுஷ்டானத்திலிருந்து வருவதுடன் பொதுப் படையாய்ச் சமூக முன்னேற்றத்தை யுண்டுபண்ணுவதான பற்பல கொள்கைகள் இன்றும் அனுஷ்டானத்திலிருந்து வருகின்றன. உதாஹரணமாய் :—உலக ஜனக் கணிதத்தில் சரிபாதிப் பேர்களான பெண்மணிகளுக்கு வேண்டிய சொத்துரிமை, விதவா விவாகம், விவாக ரத்து, பெண் கல்வி முதலான அவசியமான உரிமைகளைக் கொடுக்கும்படி இஸ்லாம் வலியுறுத்திப் போதிக்கின்றது. பெண்மணிகளைப்பற்றி இறைவன் குர்ஆன் திருமறையின் ஓரிடத்திற்கூறுவதாவது:—"மேலும், (புருஷர்களுக்குப்) பெண்ஜாதிகளின் மீது பாத்தியதைகள் இருப்பதே போன்று அவர்களுக்கும் (புருஷர்களின்மீது) பாத்தியதைகள் இருக்கின்றன; மேலும் ஆடவர் பெண்டிரைக் காட்டினும் சிறிது அந்தஸ்துடையராவர்." (2,228) என்பதேயாகும். இதனாற்றான் நபிகள் நாயக மவர்கள், "ஸ்திரீ ரத்தினங்களின் பாத்தியதையானது மகா பரிசுத்தமுடையதா யிருக்கின்றது. ஆதலின், அவர்களுக்குரிய பாத்தியதையானது பாதிக்கப்படாமலிருக்கும்படியான வழியில் நடந்துகொள்ளுங்க" ளென்று போதித்துள்ளார்கள்.

மேலும், தீண்டாமை என்னும் பேயை அடியோடே யொழித்துச் சமத்துவம் சகோதரத்துவம் என்னும் ஐக்கிய பாந்தவ்வியத்தை இஸ்லாமானது உலகில் நிலை நிறுத்தி யிருக்கின்ற தென்பதை யாரே மறுக்கவல்லார்? ஒற்றுமைக்கும் பகுத்தறிவிற்கும் பங்கத்தை உண்டுபண்ணும்படியான வட்டி வாங்குவதையும் மது வருந்துவதையும் கண்டித்து விலக்கி யிருக்கின்றது. சமூக வாழ்வில் அசட்டுத்தனமான மனப்பெருமையைக் காட்டிச் சமத்துவத்தைப் போக்கடிக்கக் கூடியதான பட்டுடுத்துவதையும் தங்கம் பூணுவதையும் புருஷர்களுக்கு விலக்கலாக்கி யாவரையும் வேற்றுமையின்றி வாழச் செய்திருக்கின்றது. உலக சமாதானமும் ஒருவர்க் கொருவர் ஐக்கியமும் ஏற்படும் வண்ணம் ஒருவரை யொருவர்

சந்தித்தால் "சாந்தி உம்மீது உண்டாவதாக!" என வாழ்த்தும்படி இஸ்லாம் கட்டளையிட்டிருக்கின்றது. இவ்வாறு வாழ்த்துவதால் ஒரு வகையில் ஒற்றுமையும் அன்பும் ஒருவர்க் கொருவர் உண்டாவதுடன் மறு வகையில் 'மனிதன் அடையக்கூடியது சாந்தி நிலையே' என்று நிமிஷத்திற்கு நிமிஷம் ஞாபகப் படுத்துவது மாகின்றது.

மேற்கூறப்பெற்றுள்ள எல்லாவிதமான மூலக்கொள்கைகளினின்றும் இஸ்லாமானது மனிதர்களிடத்தே இரண்டுவிதப் பிரயோஜனத்தை எதிர் நோக்கி நிற்கின்றது. ஒன்றாவது பராபரனுக்கு முற்றும் கட்டுப்படுதலாகும். இரண்டாவது மனிதர்களுக்கு நன்மை செய்வதாகும். இதைக் குறித்துத்தான் கீழ்க்காணும் திருமறைத் திருமொழி நன்கு விளக்குகின்றது:—"அவ்வாறில்லை, ஆயினும் எவரொருவர் ரக்ஷகனுக்கு முற்றுந் தலை சாய்த்து (மனிதர்களுக்கு) நன்மை செய்கிறவரா யிருக்கின்றாரோ அவரது சன்மானமாகிறது அவருடைய இறைவனிட மிருக்கின்றது; மேலும் அவர்களுக்கு (யாதொரு) அச்சமுமில்லை, அன்றியும் அவர்கள் துயரப் படவுமாட்டார்கள்' (2,112) "மனிதர்களிடம் அன்பு வைக்காதவர்களிடம் இறைவனும் அன்பு வைக்கமாட்டான்" என்றும் இஸ்லாம் உபதேசிக்கின்றது.

இஸ்லாமும் ஸமரஸமும்.

இஸ்லா மார்க்கம் ஒரு குறிப்பிட்ட வகுப்பார்க் கன்றி அகில மக்கள் அனைவர்க்காகவும் அருளப்பெற்றிருப்பதிலிருந்து அதன் ஸமரஸப் பான்மை "குன்றின்மீன் திட்ட தீபம்"போல் நனி சிறந்து விளங்குகிறது. இதற்கு முன்னுள்ள சகல ஜாதியார்களுக்கும் அருளப்பெற்றுள்ள வேதங்களையும் தீர்க்க தரிசிகளாம் சிரேஷ்டர்களையும் இஸ்லாம் ஒப்புக்கொள்கின்றது. இஸ்லாத்தை ஒப்புக் கொள்ளாதவர்களைப்பற்றிக் கூறுங்கால், "மத விஷயத்தில் பலவந்தமில்லை; (ஏனெனின்) மெய்யாகவே சரியான மார்க்கமானது தவறான மார்க்கத்தினின்றும் விளக்கமாக வேறுக்கப்பட்டிருக்கின்றது." (2,256) என்று இஸ்லாம் எச்சரித்திருக்கின்றது. ஆகையாற்றான் நபிகள் நாயக மவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:—"இஃது என்னுடைய மார்க்கம் மட்டு மல்ல; உங்களுடைய மார்க்க மாகவும் அமைந்திருக்கின்றது. இதுதான் சகல மதங்களின் உண்மையாயிருத்தல் வேண்டும். இஃது என்னுடைய மார்க்கத்தின் உண்மைக்கு மட்டும் சாட்சியங் கூறக்கூடிய வேதமாயில்லை; உங்களுடைய மதத்தின் உண்மைக்காகவும் சாட்சியங் கூறிக்கொண்டு, உங்களுக்கும், எனக்கும், மற்றுமுள்ள ஒவ்வோர் ஆண் பெண்ணுக்கும், எல்லா மதங்களிலும் காணப்படக் கூடிய பொய்யினின்றும் வேறுகிய மெய்யின் வழியையே காண்பித்துக் கொண்டிருக்கின்ற உங்களின் வேதமாகவும் இஃது அமைந்திருக்கின்றது." என்றும், "ஆண்டவனுடைய சிருஷ்டிப் பொருள்களிடம்

பிரியம் பாராட்டுகிறவரிடம் அந்த ஆண்டவனும் பிரியம் பாராட்டுகின்ருன்; ஆதலின், நல்லவனுயினும் கெட்டவனுயினும் யாராயிருப்பினும் இவ் வகிலத்திலுள்ள மனிதர்களிடத்தில் பிரியமாயிருங்கள்; தீய மனிதனிடத்தில் பிரியமாயிருப்பதால் அவன் அத் தீமையினின்றும் விடுபடுகின்ருன்; இதனுல் விண்ணவர்களும் உங்களிடத்தே பிரியமாயிருப்பார்கள்" என்றும் நபிகள் பிரான் (ஸல்) அவர்கள் மொழிந்தருளியுள்ளார்கள். இவ்வுபதேசத்திலிருந்து, இஸ்லாம் மக்களிடத்து எத்துணைப் பரஸ்பர ஸமரஸத்தைக் காட்டுகின்றதென்பது எந்தச் சாமானிய அறிவுடையோர்க்கும் விளங்காமற் போகாது.

இஸ்லாத்தின் அபிவிருத்தி.

இத்தகைய ஸமரஸ ஸன்மார்க்கத்தின் கொள்கைகளை யுணர்ந்த மனித கோடிகள் அத்தியந்த விசுவாசத்துடன் இம்மார்க்கத்தைக் கடைப்பிடிக்க முற்பட்டு விட்டனர். நபிகள் நாயக மவர்களின் காலத்திலிருந்து சுமார் ஆயிரத்துச் சில்லறை வருஷங்களுக்குள்ளேயே உலக ஜனங்களில் சுமார் நாற்பத்தைந்து கோடிக்கு மேற்பட்ட அறிஞர்கள் இஸ்லாத்தைத் தழுவி யிருக்கின்றனர். இதற்குக்காரணம் இம்மார்க்கத்தின் கொள்கைகள் மனிதர்களுக்குச் சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையுங் கொடுத்து, ஒவ்வொருவரையும் அவர் ஆணுனுலும் பெண்ணுனுலும் சுதந்தரத்துடனும் சுய மரியாதையுடனும் இன்ப வாழ்வில் திகழும்படி செய்ததே யாகும். இதுபோது இவ் வகிலத்தின்கண் புதிது புதிதாய்த் தோன்றுகின்ற சீர்திருத்தக்காரர்களான அயல் மதவாதிகள் அனுஷ்டிக்க முற்பட்டிருக்கின்ற விக்ரக விலக்கு, தீண்டாமை யொழித்தல் விதவா விவாகம், விவாக ரத்து, பெண்கட்குச் சொத்துரிமை முதலான மக்களுரிமைக ளனைத்தும் ஆயிரத்து முந்நூற்றைம்பது வருஷங்களுக்கு முன்னேயே வெளிவந்து, முஸ்லிம்களால் ஒவ்வொரு நாளும் எடுத்தனுஷ்டிக்கப் பெறுகின்ற கொள்கைகளே யாகுமென்பது மிகைபடக் கூறியதாகாது. இஃதொரு பக்கல் கிடக்க:—

இஸ்லாத்தின் அபிவிருத்திக்குக் காரணத்தை யுணர்ந்துகொள்ளுஞ் சக்தியற்ற சிலர் "இஸ்லாம் வாளைக் கொண்டு பரவியது" என்று பொய்ப் பிரசாரஞ் செய்து, ஹிந்து முஸ்லிம்களுக்குள் இருந்து வருகின்ற சகோதரத்துவத்தைக் கெடுத்து, துவேஷத்தை யுண்டு பண்ணி வருகின்றனர். என்னே இக்காலத்தின் திரிபு! "மத விஷயத்தில் பலவந்தமில்லை" என்று போதிக்கின்ற இஸ்லாம் மார்க்கம் வாளாயுதத்தைக் கொண்டு பரத்தப்பட்டதென்பது ஆச்சரியப் படத்தக்கதொரு விஷயமாகவே காணப்படா நின்றது. அவ்வாறு கூறுகின்ற மேதாவிகள் என்ன ஆதாரங் காட்டுகின்றனரென்ருல், முகலாய மன்னர்கள் இந்தியாவில் படையெடுத்த காலத்தையே காட்டுகின்றனர். அம் மன்னர்கள் அரசியல் விஷயமாய்ப் போர் தொடுத்தனரே யன்றி மத விஷயமாய்ப் போர் தொடுத்தன

ரல்லர். போரிடுங் காலங்களில் எதிரிகளுக்குச் சொந்தமான பல வற்றையும் நாசப்படுத்தல் இன்றளவும் பிரத்தியக்ஷப் பிரமாணமாய்க் காணக்கூடிய விஷயமாகவே யிருந்து வருகின்றது. அவ்வாறு அது சமயம் பல கோயில்களும் பற்பல மசூதிகளும் இடிந்தே தகர்ந் திருக்கின்றன. அவ் வரசர்களின் ஆட்சி ஊன்றி விட்டபின் முஸ்லிம் அரசராயுள்ள ஔரங்ஜேப் அரசரால் எத்தனையோ ஆலயங்கள் சீர்பெற்று மானியம் விடப்பெற்றுச் செப்புப் பட்டயத்துடன் இன்றளவும் வடநாட்டில் விளங்குகின்றன. அவர் ஆரம்பத்தில் போர் தொடுத்தது மத விஷயத்தினு லென்றால், அவர் தமது அதிகாரஞ் செல்லக்கூடிய காலத்தில் கோயில்களைப் புதுப்பிக்கவும் மானியம் விடவும் ஏற்பட்டிருக்காது. அதுபோது கிட்டத்தட்ட எண்ணூற் றைம்பது வருஷங்கள்வரை முஸ்லிம்கள் இந்தியாவை அமைதியுடன் ஆண்டு வந்தார்க ளென்பது சரித்திர முணர்ந்தவர்கள் ஒப்புக்கொள்ளும் உண்மையாகும். அன்றியும், ஆங்கிலேயர் ஆட்சியின் ஆரம்பக் காலத்தில் இந்தியாவின் ஜனத்தொகையில் பத்தி லொரு பங்கினரே முஸ்லிம்கள் இருந்தனர். இப்போது அபிவிருத்தியினால் சுமார் நாலி லொரு பங்கினர் முஸ்லிம்களாய்ப் பெருகிவிட்டனர். இந்த பிரிட்டிஷார் காலத்தில் இஸ்லாம் வாளைக் கொண்டு பரவிய தென்று கூறயாரே துணிவர்? மேலும் முஸ்லிம்களின் படை யெடுப்பில்லாத சீனாவில் 20 கோடி முஸ்லிம்களும், ஆப்பிரிக்கா, இங்கிலாந்து முதலிய இடங்களில் பெரும்பான்மையான முஸ்லிம்களும் பரவி வருவதற்கு வாளாயுதம் துணையாகுமாவென்று கேட்கின்றோம். ஆதலின் யாவரும் ஸமரஸமாய் உண்மையுணர்ந்து வாழ எல்லாம் வல்ல இறைவன் இன்னருள் பாலிப்பானாக.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இறைவன் துணை.

கௌமார குருகுலம்—மன்னார்குடி.

மன்னார்குடியில் ஏற்படுத்தப்பட்டுள்ள கௌமாரகுருகுலம், மன்னார்குடியைச் சுற்றி 12 மயில் தூரத்திற்குள்ள கிராமவாசிகளின் கல்வி நலத்திற்காக அமைக்கப்பட்டுள்ளது. சுற்றுப்பிரயாணப் புத்தகசாலைத் தொண்டினால் இங்கிருந்து 95 கிராமக்கிளைகளுக்கு இனாமாகப் படிக்கப் புத்தகங்கள் கொடுத்து வாங்கப்படுகின்றன. சித்திரை ஐப்பசி மாதங்களில் கிராம வாலிபர்களுக்கு பிரத்தியேகப் பள்ளிக்கூடம் வைக்கப்பட்டு உயர்தரக் கல்வி போதிக்கப்படுகிறது. வேண்டிய விபரம் காரியதரிசிக்கு எழுதித் தெரிந்து கொள்க.

முதியோர் கிராமக் கல்வி நூல்.

கிராமத்தில் உள்ளவர்கள் முன்னேற்றம் அடைந்தாலல்லது நமது நாடு முன்னேற்றமடையாது என்பது யாவரும் ஒப்புக்கொண்டது. பழைய முறைகள் மாறி புதிய முறைகள் தலை எடுக்கும் இக்காலத்தில் சகல துறைகளிலும் வாழ்க்கை நலம் அடையத்தக்க அறிவு ஒரு அளவு கிராமவாசிகள் யாவருக்கும் அவசியம். வாழ்க்கைத் துறைகள் எனப்படும்,

1. சமயமும் ஒழுக்கமும்
2. சுகாதாரம்
3. கிராமப் பொருள் நிலை
4. தமிழ் மொழி
5. தேசசரித்திரம் பூகோளம்
6. தேசபரிபாலனம்
7. பூதபௌதிக அறிவு.

முதலிய விஷயங்களைப்பற்றி கிராமங்களிலிருந்து முதியோர் 45 பேர்களைக் கூட்டி பல பெரியார்களைக் கொண்டு மன்னார்குடி கௌமாரகுருகுலத்தில் இவ்வாண்டு சித்திரை மாதத்தில் 70 உபந்நியாசங்கள் நடத்தப்பட்டன. அவைகள் எல்லாம் அச்சிடப்பட்டு, 4 புத்தகங்களாக கட்டபட்டுள்ளன. இந் **நான்கு புத்தங்களும் சேர்ந்து 712 பக்கங்களும் 53 படங்களும் உடையன.** விலை ரூ 2—8—0

இப் புத்தகம் ஒவ்வொரு குடும்பத்திலும் தினசரி உபயோகப் படத்தக்கது.

ஆசிரியர்கள், திருவாளர்கள்.

டாக்டர், மகாமஹோபாத்தியாய உ. வே. சாமிநாத ஐயர், எல், எல், டி
எஸ். முத்தைய முதலியார் பி. எ. பி. எல், (முன் மந்திரி)
கெ. வி. சேஷய்யங்கார் எம். எ. பி. எல்.
கெ. எஸ். ஸ்ரீனிவாசாரியார் எம் எ. பி. எல்,
ரெவரன்ட் என். ஜி. பொன்னையா பி. எ. எல். டி.
த. வே. உமாமகேசுவரம் பிள்ளை, பி. எ. பி. எல்.
எம். பாலசுப்பிரமணிய முதலியார் பி. எ. பி. எல்.
நீ. கந்தசாமிப் பிள்ளை, எம். ஆர். எ. எஸ்.
காப்டன். டி. கே. நாராயணராவ் எம். பி. பி. எஸ்.
பி. வி. முத்துக்கிருஷ்ண ஐயர் எல். எம். பி.
எ. சொக்கலிங்கம். எல். எம். பி.
எஸ். சிவசுப்பிரமணிய ஐயர்.
சி. மீ. முகம்மதுயூசுப் பாவலர்.
இராவ்சாகிபு எ. சேதுராமய்யர்.
இராவ்சாகிபு சு. வி. கனகசபைப் பிள்ளை முதலியோர்கள்.

1. **சமயமும் ஒழுக்கமும்:** இதில் சைவம், வைஷ்ணவம், கிறிஸ்து சமயம், இஸ்லாம் மதங்களின் உண்மைகளும் அவர்கள் பிரார்த்தனைகளும், ஆன்மவளர்ச்சி, ஸ்தூல சூக்ஷம தேகங்கள், மதியும் விதியும், சூரிய நமஸ்காரம் தற்காலத்திற்கு அவசியமான ஒழுக்கங்கள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

2 **சுகாதாரம்:** நோய்களும் சிகிச்சைகளும் இங்கிலீஷ் தமிழ் வைத்திய முறைகளின்படி சொல்லப்பட்டிருக்கிறது;. உடல் நூல், சுத்தவாழ்வு, உணவு, பானம், உடற் பயிற்சி, பிள்ளைப் பேறு, பிள்ளை வளர்ச்சி, கிராம சுகாதார வேலை அடங்கியது. கிராமத்திலேயே வீடுகளில் அவசியம் போல் செய்து கொள்ள கைமருந்துகள் கூறப்பட்டுள்ளன.

3 **கிராமப்பொருள் நிலை:** விவசாயம், ஆடு மாடு கோழி வளர்த்தல், குடும்பக் கைத்தொழில், குடும்பவாழ்க்கை, குடும்ப சிக்கனம், குடும்ப கணக்கு, நில அளவு.

4. **தமிழ்மொழி.** கிராமக்கல்வி, தமிழின் பெருமை, தமிழ் இலக்கியப் பகுதிகள், கம்பராமாயணம், பிரபந்த ஆராய்ச்சி, புத்தகசாலைகள், பெண் கல்வி,

5. **தேசசரித்திரம், பூகோளம்:** பண்டைத் தமிழர், தமிழ் நாட்டு சரித்திரம், முற்காலத்தில் கிராம பரிபாலனம், இந்தியா தேசசரித்திரம், இங்கிலாந்து தேசசரித்திரம், கிராம பூகோளம், தமிழ்நாட்டு பூகோளம், இந்திய பூகோளம், உலக பூகோளம்,—படங்களுடன்.

6. **தேசபரிபாலனம்:** சர்க்கார் விசாரணை, டென்மார்க்தேச பொதுஜன உயர்தரப் பாடசாலை, கூட்டுறைப்பின் டென்மார்க் தேச இயக்கம், கூட்டுறவும் கிராம முன்னேற்றமும், தாலூக்காபோர்ட், யூனியன், பஞ்சாயத்துகள், வோட்டின் உத்திரவாதம், ஐக்கிய முறை, நாணயசங்கங்கள்.

7. **பூதபௌதிக அறிவு:** தாவரம், ஜீவராசிகள், விகாச முறை, தினசரிவாழ்வில் பூதபௌதிக அறிவு, பௌதிக சாஸ்திரம், ரஸாயன சாஸ்திரம், பஞ்சாங்கம், வானசாஸ்திரம், நக்ஷத்திர படங்கள், சீதோஷ்ணம், மழை காற்று படங்களுடன்.

இவையன்றி இப் புத்தகத்தில் கௌமாரகுருகுலத்தைப் பற்றிய பூரா விபரமும் படங்களுடன் சேர்க்கப்பட்டுள்ளது.

விவசாயம்: 24 பக்கங்களுடையது, பயிர் செய்யும் ஒவ்வொருவருக்கும் அவசியமானது. பழி மொழி, குறள்களுடன் தற்காலத்தில் கண்டறியப்பட்ட புதிய விஷயங்கள் அனுபவத்தில் வேண்டியவை அடங்கியது. விலை அணா 4.

தினசரி ஹிந்து பிரார்ந்தனைகள், சர்வசமயப்பிரார்த்தனைகள். இது சைவ, வைணவ, கிறிஸ்து, முஸ்லீம் யாவருக்கும் பயன்படும். அவ்வச் சமய நூல்களினின்றும் எடுத்து தொகுக்கப்பட்டது. 20 பக்கங்கள் அடங்கியது. விலை அணா 4.

முதியோர் கல்வி முறை: 42 பக்கங்கள் அடங்கியது. கௌமார குருகுலத்தைப்பற்றிய முழு விபரமும் படங்களும் அடங்கியது. விலை அணா 3.

உடற்பயிற்ச்சி படம்: ஆண் பெண் ஒவ்வொருவரும் இயற்கையாகச் செய்யக்கூடியது. உடலில் உள்ள ஒவ்வொரு உறுப்புக்கும் நலம் தரும் பயிற்சிகள். விலை அணா 1.

Ideals & Service of Koumaragurukulam. Gives full details of this Adult Education centre including Travelling Library Service Pages 36 with pictures. Price as 6.